# காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

மலர் 1 இதழ் 16



"காஞ்சி"

# உன் கதி இதுவே!

மலர் 1 8—11—64 இதழ் 16

நீதி நிச்சயம் நிலைத்திடும்; நேர்மை வென்றிடும்; மனிதாபிமானம் மதிக்கப்படும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

வீட்டின் விளக்கை அணைக்கமாட்டார்கள்; விழியில் நீர் பெருகிடச் செய்யமாட்டார்கள்; வெந்தழலில் தள்ளிடமாட்டார்கள்; வேதனையைத் துடைத்திடுவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

இனவெறியை அடக்கிடுவார்கள், நிம்மதியான வாழ்வினைப் பெற்றிட வழி செய்திடுவார்கள் என்று அவர்கள் நம்பிக்கொண்டிருந்தனர்.

எமக்காக வாதாட, பரிந்து பேச, ஆதரவு காட்ட, பெரியதோர் நாட்டுத் துரைத்தனம் இருக்கிறது; எமக்குக் கொடுமைகள் இழைக்கப்படுவது கேட்டு மனம் குமுறவும், இது அறமல்ல! என்று கூறி அக்ரமம் செய்திடுவோரைத் தடுத்து நிறுத்திடத்தக்க தகுதியும் திறமையும் பெற்றவர்கள், பேரரசு நடாத்திக்கொண்டுள்ளனர்; நீதி காத்திட அப்பேரரசு முனைந்து நிற்கும் என்று நம்பினர்; அந்தநம்பிக்கையைத் துணைகொண்டு அவர்கள் சொல்லொணாத இன்னல்களைத் தாங்கிக் கொண்டனர்; காரிருள் மறையும் கதிரவன் உதிப்பான், ஒளி காண்போம் என்று உள்ளூற நம்பிக்கிடந்தனர்.

அவர்கள் தூற்றப்பட்டார்கள் துடுச்குத்தனமாக; பொறுத்துக்கொண்டனர்.

அவர்கள் வேட்டையாடப்பட்டனர், வெறியர்களால்; விம்மினர்; எனினும் நற்காலம் பிறக்கும், இடையே ஏற்படும் இடுக்கணைப் பொருட்படுத்தக் கூடாது; எதையும் தாங்கும் இதயம் கொண்டோராக இருந்திடல் வேண்டும் என்று எண்ணி, உறுதியைத் தருவித்துக் கொண்டனர்.

ஓடு! நாட்டை விட்டு! பிழைக்க வந்தவனே! பிடி சோற்றுக்கு அலைபவனே! கூலி வேலை செய்பவனே! உனக்கு என்றோர் மொழி! ஒரு மரபு! ஒரு வரலாறு! தூ! தூ!! உன்னை நான் எது செய்திடினும், ஏன் என்று கேட்டிட யார் உளர்! நாதியற்றவனே! நாடற்றவனே! நட! நட!—என்று மிரட்டினர் மமதை கொண்டோர்; மனம் வெந்துபோகும் விதமாக இழிமொழி உமிழ்ந்தனர்; அவர்கள் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டனர்; வெறி அடங்கிடும், நேர்மை பிறந்திடும் என்ற நம்பிக்கையின் துணையை நாடினர்.

அவர்களின் கடைகளைச் சூறையாடினர், இழுத்துப்போட்டடித்தனர்; ஐயா! நான் ஏழை! என் சொத்தே இந்தக் கடைதான்! காலமெல்லாம் பாடுபட்டு. வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி மிச்சம் பிடித்து இந்தக் கடை வைத்தேன்; இதிலே பாதி கடன்! பாழாக்காதீர்! நாசம் செய்யாதீர் என்று முறையிட்டனர்; வெறியர் மனம் இளகவில்லை; காலில் வீழ்கிறான் அடிமை! அதைத்தான் செய்வான்!! கைகூப்பி நிற்கிறான்! கருணை காட்டாதீர்! துரத்து! கொளுத்து! தீ மூட்டு! சூறையிடு! ஓடட்டும், ஒழியட்டும்!—என்று கொக்கரித்தனர் கொடியோர்கள்; எமக்கு வந்துற்ற இந்தப்பாசத்தைத்தடுத்திடும் ஆற்றல் பெற்றோர் உள்ளனரே; இருந்தும் வாளாயிருக்கின்றனரே! ஏன்! ஏன்!!—என்று கேட்டுக் கேட்டு விம்மினர்;

குத்திக் கொன்றனர்; வெட்டிவீழ்த்தினர்; கொளுத்தினர்; கோல்கொண்டு தாக்கினர்; என்ன குற்றம் இழைத்தோம் இந்த நிலை பெற என்று அவர்கள் கேட்டனர்; குற்றமா! கூறுகிறோம் நீ செய்த குற்றத்தை நீ இங்கு இருக்கிறாயே அதுதான் குற்றம்! உழைக்கிறாயே, அதுவும் குற்றம்தான்! உனக்கென ஒரு மொழி உளது என்கிறாயே அது மன்னிக்க முடியாத குற்றம்!! என்று கூறிக் கேலிச் சிரிப்பொலி கிளப்பினர்; ஆதிக்க வெறிகொண்டலைவோர்.

கற்பழித்தனர்! ஆம்! எந்தக் கொடுமையை எவரும் தாங்கிக்கொள்ள முடியாதோ, அந்தக் கொடுமையையும் செய்தனர் வெறியர்கள்! எல்லாம் எதன் பொருட்டு? அவர்களை விரட்ட! ஏன்? அவர்கள். தமிழர்கள் என்பதால்!!

அவர்கள் தமிழர்கள், ஆனால் தமிழகத்தைக் காணாதவர்கள்,

அவர்கள் பேசுவது தமிழ், ஆனால் அவர்கள் பிறந்தது சிங்களத் தீவினில்! அவர்கள் மட்டுமா! அவர்களுடைய முப்பாட்டனார் பிறந்ததே இலங்கைத் தீவினில். பலப் பல தலைமுறைகளாக இலங்கைத் தீவினிலே இருந்து வருபவர்களை சிங்கள இனவெறி தலைக்கேறிய நிலையினர் இனி இங்கு உங்கட்கு இடமில்லை! ஓடிடுக உமது நாட்டுக்கு!! என்று உறுமலாயினர்.

எமக்கு இந்நாடன்றி வேறு எந்தநாடும் தெரியாதே! இங்குதான் பிறந்தோம்! இங்குதான் எமது பாட்டனாரின் கல்லறையும் உளது. இங்குதான் நாங்கள் வியர்வையைப் பொழிந்தோம். இங்குதான் எமது உழைப்பினை அளித்தோம்! இந்நாடு எமக்குச் சொந்த நாடு என்ற உணர்விலேயே வளர்ந்துவந்திருக்கிறோம். இந்த நாட்டில் மற்றவர்க்கு உள்ளதுபோலவே எமக்கும் உரிமை உண்டு என்று அறத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அறிவிக்கிறதே. எம்மை ஏன் வெளியே போகச் சொல்கிறீர்! எங்கு செல்வோம்

காலில் வெள்ளெலும்பு முளைத்த நாள்முதலாய் இங்கல்லவா உழைத்துவந்திருக்கிறோம். காட்டுமிருகங்களுடன் போராடி அவற்றின் கோரப்பற்களுக்கு இரையாகினரே எமது முன்னோர்! காடு திருத்திக் கழனியாக்கிடக் கடும் உழைப்பைத் தந்தோமே நாங்கள்! மரகதத்தீவு! என்று கவிதா நடையிலே புகழ்கின்றார்களே இந்த நாட்டை; இந்நிலை இந்நாடு பெற்றது எமது ஓயாத உழைப்பினாலன்றோ! இந்நாட்டுடன் நாங்கள் எங்கள் வாழ்க்கையைப் பிணைத்துக்கொண்டுவிட்டோம்; எமக்கு வேறோர்நாடு எதற்கு? ஏன் எம்மைத் துரத்த எண்ணுகிறீர்! என்று அவர்கள் கேட்டனர். அவர்களின் தொகை பத்து இலட்சம்!!

இலங்கைத் தீவுக்கு உரியவர்கள் நாங்களே! நீங்கள் இங்கு இருக்க இனி அனுமதி இல்லை. காரணம் கூறிடத் தேவையுமில்லை. விருப்பமில்லை! வெளியேறு! நாங்கள் சிங்களவர்! இது சிங்களத்தீவு! எமது கொடி சிங்கக்கொடி!! என்று கடுமொழி புகன்றனர்; சிங்கள சர்க்கார், அந்த வெறியை அடக்கிட முன்வரவில்லை, மாறாகத் தன் புன்னகையாலும் கண்சிமிட்டலாலும், அந்த வெறியை மேலும் தூண்டிவிட்டபடி இருந்தது.

வேறு எங்கேனும், பத்து இலட்சம் மக்கள், அந்த நாட்டிலேஉள்ள பெருவாரியான எண்ணிக்கை கொண்ட இனத்தவரால், அவர்தம் அரசினால், இன்னலுக்கு ஆளாக்கப்படுகிறார்கள், இழிவாக நடத்தப்படுகிறார்கள், என்றால், அறம் அறிந்தோர் பதறி எழுவர்; இது இனக்கொலை, இதனை அனுமதிக்கமாட்டோம் என்று முழக்கமிடுவர்.

ஐக்கியநாடுகள் மன்றம் இதுகுறித்துக் கேட்டிடும் உரிமைபெற்றிருக்கிறது; எவ்விதமெனில், நாடுகளின் 'சுதந்திரம்' குறித்துமட்டுமல்ல, மக்களின் அடிப்படை உரிமைகள் எங்கேனும் எவராலேனும் அழிக்கப்பட்டால், ஏனென்று கேட்டிட, தடுத்து நிறுத்திட அந்த மாமன்றம் உரிமை பெற்றிருக்கிறது.

எனினும், மொழியால் தமிழராகஉள்ள பத்து இலட்சம் மக்களையும், விரட்டியடிக்க இலங்கையில் கொடியதோர் முயற்சி மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஐயோ! என்று இரக்கம்காட்டவோ, ஆகாது என்று அறிவுறுத்தவோ, அக்ரமம்! என்று கண்டிக்கவோ, தமிழக அரசு துணிவுகொண்டிடவில்லை; காரணம்? இங்கு அரசு என்று உள்ள அமைப்பு, இத்துறை எம்மிடம் இல்லை; டில்லி அரசிடமே உளது; என்று கூறிக் கைவிரித்துவிட்டது, டில்லி அரசோ, இலங்கைக்குள்ளே நடைபெறும் நடவடிக்கை குறித்து ஏதும் கேட்பது கூடாது; ஏனெனில் அது இலங்கையின் அரசுரிமைத் துறையிலே நுழைந்திடும் அடாத செயலாகிவிடும் என்று விளக்கமளித்துவிட்டது. இலங்கையிலே விம்முகிறார்கள்; இங்கே விளக்கமளிக்கிறார்கள்.

இந்நிலை கண்ட பிறகு, சிங்கள அரசுக்கு ஏற்கனவே பிறந்திருந்த துணிவு பன்மடங்கு வளர்ந்தது; இந்தப் பத்து இலட்சம் 'பராரிகளை' என்ன நாம் செய்தாலும், எவரும் குறுக்கிடமாட்டார்கள் என்ற துணிவு, கொடுமை வளர்ந்தது; வளர்ந்து வளர்ந்து, இவர்கள் அனைவரும் இந்தியர்கள், எனவே இவர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டியது இந்திய சர்க்காரின் கடமை. இவர்கட்கு இலங்கையில் இடமில்லை; இவர்கட்குச் சொந்த இடம் இந்தியா! எனவே இவர்கள் இந்தியா சென்றிடுவதே முறை!! என்று கூறலாயினர்.

இவர்கள் இலங்கையில் பிறந்து வளர்ந்தவர்கள் இலங்கையின் வளர்ச்சிக்காக உழைத்தவர்கள்; இவர்கள் இலங்கைக்காரர்கள், இந்தியர்கள் அல்ல! எனவே இவர்களை இந்தியாவிற்கு அழைத்துக்கொள்ளச் சொல்வது முறையுமல்ல, அறமுமாகாது; இது எமது பிரச்சினையே அல்ல!! என்று டில்லி தெரிவித்தது. தமிழக அரசோ, இலங்கைத் தமிழர்பற்றி டில்லி முடிவெடுக்கும் என்று தெரிவித்ததுடன் தனது கடமை முடிந்துவிட்டதாக எண்ணிக்கொண்டது. பத்து இலட்சம் மக்கள், கொந்தளிக்கும் கடலில் பாய்மரமற்ற நாவாய்படும் பாடுபட்டுக்கொண்டு வதைபட்டனர், அவர்களின் வேதனையைக் கண்டு சிங்கள ஆதிக்க வெறியர்கள் கைகொட்டிச் சிரித்தனர்.

எத்துணை கொடுமையாளர்களாயினும், பத்து இலட்சம் மக்களை, இழித்தும் பழித்தும் பேசலாம், இன்னல் பல மூட்டலாம் ஆனால், அவ்வளவு பேர்களையும் படுகொலை செய்துவிட முடியாதல்லவா! பல கொடுஞ்செயல்களைத் தாங்கிக்கொண்டுள்ள இந்தக் குவலயத்தாலேயேகூட, பத்து இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்படுவதைச் சகித்துக்கொள்ள முடியாதல்லவா! அதனால், வெறி மண்டையில் புகுந்து குடைந்திடும் நிலை பெற்றிருந்தபோதிலும், சிங்களவர்களால், பத்து இலட்சம் மக்கள் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை. கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு, பத்து இலட்சம் தமிழ் மரபினர், தமது உரிமையை இழக்கக்கூடாது என்ற உறுதியுடன், போராடிக்கொண்டு வந்தனர். அவர்களின் உரிமைக் கிளர்ச்சியை ஒடுக்க இலங்கை அரசு அவிழ்த்துவிட்ட அடக்குமுறை பலருடைய உயிரைக் குடித்தது; தியாகம்புரிந்திடத் தயங்காது உரிமைக் கொடியை உயர்த்திப் பிடித்தபடி நின்றனர் தமிழ் மரபினர்.

வரலாறு காட்டுகிறது, நெஞ்சு நெகிழத்தக்க பல நிகழ்ச்சிகளை உரிமைக்காகப் போரிடும் உள்ள உறுதி படைத்தவர்களுக்காக, பல்வேறு முனைகளிலிருந்து, உதவிகள் பல்வேறு வழிகளிலே அளிக்கப்பட்டு வந்தது பற்றிப் படிக்கிறோம்.

இலங்கையில், உரிமைக் கிளர்ச்சியிலே தமிழர்கள் முனைந்து நின்றபோது ஒருதுளி ஆதரவு, ஆதரவான ஒரு சொல் அளிக்கவும் தமிழகம் துணிவு பெறவில்லை; டில்லியோ வேறு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும்போது இந்தப் பிரச்சினையிலா காலத்தைச் செலவிட முடியும் என்று செப்பிவிட்டது.

இந்தப் போக்கு இலங்கை அரசு ஏற்கனவே கொண்டிருந்த துணிவை, இறுமாப்பு அளவுக்கு வளர்த்துவிட்டுவிட்டது. என்ன சொல்கிறீர்கள், இவர்கள் நாடற்றவர்கள் என்று அறிவிக்கிறோம் என்று தெரிவித்தது, எந்த நாட்டிலே பிறந்து வளர்ந்து உழைத்து வளர்த்து வருகிறார்களோ அந்த இலங்கை நாட்டிலே இவர்கள் நாடற்றவர்கள்!! இத்துடன் விடவில்லை இலங்கை, இவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தலாயிற்று.

ஏற்றுக்கொள்ளாவிட்டால், என்ன நடந்துவிடும்? பத்து இலட்சம் மக்களையும் படகுகளில் ஏற்றி, கடலிலே தவிக்கவிட்டுவிட முடியுமா!

அங்கனம் செய்திடின், பாரே கைகொட்டிச் சிரித்திருக்கும்!!

பத்து இலட்சம் பேர்களையும் கொன்று குவித்துவிடத் துணியுமா இலங்கை அரசு! அந்தப் பிணங்களைக்

கொத்த வரும் பெரும் பறவைகளின் சிறகொலியைத் தாங்கிக்கொண்டிருக்க முடியாது சிங்களவர்களால்.

பத்து இலட்சம் மக்களையும் இந்தியாவில் கொண்டு வந்து இறக்கி விட்டுவிட முடியுமா! இந்திய துரைத் தனத்தின் வல்லமையைத் தாங்கிக்கொள்ள இயலுமா சிங்கள சர்க்காரால்!

இவற்றை எல்லாம்விட மேலானதாக, வலிவுமிக்க தாக வேறென்றும் உளது, அவர்களின் விருப்பத்துக்கு மாருக, ஒரு பத்து இலட்சம் மக்களை ஒரு அரசு விரட்டிடும் கொடுமை நடப்பதைக் கண்டால் உலகம் சீறி எழாதா! அந்தச் சீற்றத்தைத் தாங்கிக்கொள்ள முடியுமா எந்தச் சர்க்காராலும்!

எனவே, மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, தங்கள் எதிர்காலம் என்ன என்ற ஏக்கம் தாக்கிடும் நிலை பத்து இலட்சம் தமிழ் மரபினருக்கு இருந்து வருவது என்றலும், பத்து இலட்சம் பேர்களை அவர்களுடைய விருப்பத்துக்கு மாருக எப்படி வெளி ஏற்ற முடியும்? அவர்களை ஏற்றுக்கொள்ள இந்தியா இடம் கொடுத்தாலொழிய, அவர்களை எப்படி வெளியேற்ற முடியும் எள்பதே சிங்கள சர்க்காரை வாட்டியபடி இருந்துவந்த பிரச்சினை என்பது நுணுகி ஆராய்வோருக்குப் புலனுகும்.

என்ன செய்வது? என்ற கேள்விக் குறி, பத்து இலட்சம் தமிழர்களையும் மிரட்டிக் கொண்டிருந்தது, சிங்கள சர்க்காரையும் மிரட்டிக்கொண்டிருந்தது; என்றலும் இதிலே உண்மையான சிக்கலும் தவிப்பும் சிங்கள சர்க்காருக்கே அதிகம். ஏனெனில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமானல், பார் தோன்றிய நாள் தொட்டு எவரும் நடத்திடாத படுகொலையை மேற்கொண்டாக வேண்டும், இந்தியா அந்தப் பத்து இலட்சம் பேர்களை இந்தியா வருவதற்கு இடம்தராதிருக்கும் போக்கு நீடிக்குமானல், நிலைத்திருக்குமானல்.

சிங்களச் சர்க்காருக்கு இருந்துவரும் இந்தச் சிக்கலைக் கண்டார் லால்பகதூர்; பாவம்! இதற்கோர் வழி கண்டாகவேண்டும் என்று எண்ணினர். அஞ்சற்க! இதோ நான் இருக்கிறேன் உமது பிரச்சினையைத் தீர்த்துவைக்க; பத்து இலட்சம் தமிழ மரபினர் பற்றிய சிக்கல் பல ஆண்டுகளாக இருந்துவருகிறது; உங்கட்கு இது பெருந்தொல்லையாக இருக்கிறது, உணர்கிறேன்; கவலையை விட்டொழிமின்! நான் ஏற்றுக்கொள்கிறேன் ஐந்து இலட்சம் பேர்களை! மற்றோர் ஒன்றரை இலட்சம் பேர் பிரச்சினையை அடுத்த ஆண்டு கவனித்துக் கொள்ளலாம்; சிக்கலைத் தீர்த்துக்கொள்வோம் என்று கூறிவிட்டார்!

பத்து இலட்சம் தமிழ் மரபினரில் ஐந்து இலட்சத்து இருபத்தைந்தாயிரவரை, பதினைந்து ஆண்டுகளில், இங்கே திரும்பப் பெற்றுக்கொள்வது என்று ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டார் லால்பகதூர்.

விழாவாம் இலங்கையில்! ஏன் இராது!! பாராட்டாம், திருமதி பண்டாரநாயகா அம்மையாருக்கு! ஏன் பாராட்டமாட்டார்கள்!! அம்மையாரின் தனித் திறமையால் கிடைத்த வெற்றி இது என்று ஏடுகள் எழுதுகின்றனவாம்! ஏன் எழுதமாட்டார்கள்!! சீனவிடம் பிடிபட்டுள்ள இடம் யாவும் சீனவுக்கே என்ற ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டால், லால்பகதூரின் உருவச் சிலையை பீகிங்கில், மாசே-துங்கே திறந்துவைக்க மாட்டாரா!! இலங்கைத் தலைவர்களும், இதழ்களும் லால்பகதூருடைய நல்லெண்ணத்தையும், பெருந்தன்மையையும் பாராட்டுவதாகத் தெரிகிறது; வியப்பென்ன இதிலே! லால்பகதூர், தமிழர்கள் உரிமையின்மீது ஓங்கி அடித்திடுவது கண்டால், அந்த உரிமை உணர்ச்சியைத் தாக்கித் தாக்கி, பயன் காணுது கிடக்கும் சிங்களத் தலைவர்கட்குக் களிப்பு கொந்தளிக்கத்தானே செய்யும்? பாராட்டுகிருர்கள் லால்பகதூரின் ஒப்பந்தத்தை.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக, என்ன செய்வது என்று தெரியாமல், திண்டாடித் திகைத்துக் கிடந்த இலங்கை சர்க்காருக்கு, லால்பகதூர், வெற்றியைத் தேடிக்கொடுத்துவிட்டார்.

எப்படி ஒழிப்பது தமிழரின் உரிமை உணர்ச்சியை என்று எண்ணித் தடுமாறிக்கொண்டிருந்த இலங்கை சர்க்காருக்கு, லால்பகதூர், வழிகாட்டிவிட்டார்.

இலங்கையிலே பிறந்து வளர்ந்து, அங்கேயே வாழ்ந்துவர விரும்புபவர்களை, இந்தியர்கள் என்று கூறுவது தவறு; அவர்களை இந்தியர்கள் என்று ஏற்றுக் கொள்ளமாட்டோம்; அவர்களை என்ன செய்வது என்பது எமது பிரச்சினை அல்ல என்ற கோட்பாட்டில் நேருபண்டிதர் மிக உறுதியாக இருந்துவந்தார். இருந்து வந்ததனல் இலங்கை சர்க்கார் ஏதும் செய்ய இயலாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது.

அதே கோட்பாடு தொடர்ந்து இருந்திருக்குமானல் இலங்கைக்கு, ஐக்கியநாடுகள் மன்றம் சென்று, கேட்பது தவிற வேறுவழி கிடையாது.

மனித அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்துத் தீரவேண்டிய ஐக்கிய நாடுகள் மன்றம், ஒருபோதும், பத்து இலட்சம்பேர்களையும் இலங்கை தன் விருப்பம் போல என்ன வேண்டுமானலும் செய்துகொள்ளலாம் என்று தீர்ப்பளித்திருக்க முடியாது. அந்தப் பத்துஇலட்சம் மக்களையும் தொடர்ந்து இலங்கை சர்க்கார் கொடுமைப்படுத்திக்கொண்டிருக்கவும் முடியாது. நேரு உறுதியாகக் கடைப்பிடித்துவந்த கோட்பாடு, இதுவரை அந்தப் பத்து இலட்சம் தமிழ்மரபினருக்குப் பாதுகாப்பளித்துவந்தது.

நேரு கண்ட அந்தக் கோட்பாட்டை, லால்பகதூர் அழித்தொழித்துவிட்டார். இலங்கை சர்க்கார் மகத்தான வெற்றியைப் பெற்றுவிட்டது.

சேனநாயகாக்களும் கொத்தலாவலைகளும் முயன்று பார்த்துத் தோற்றுப்போயினர். அந்தக் கோட்பாட்டை மாற்றிட, லால்பகதூர் வந்தார், நேருவகுத்த அந்தக் கோட்பாடு ஒழிக்கப்பட்டுவிட்டது; இருபது ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவந்த சிக்கலைத் தீர்த்துவிட்டேன், பலர் தோற்ற முனையில் நான்வெற்றி பெற்றுவிட்டேன்; இதோ லால்பகதூரின் கையொப்பம்; ஆண்டுதோறும் நாற்பதாயிரம் தமிழர் வெளி ஏற்றப்படுவார்கள் என்று திருமதி அறிவிக்கிருர்; திருவிழாக் கோலம் இலங்கையில்!

முடியாது! முடியாது!! என்றீர்களே! ஒப்பந்தமாகி விட்டது தெரியுமா! மூட்டை முடிச்சுடன் தயாராகிக் கொள்ளுங்கள்! இந்தியா செல்ல! இலங்கையைவிட்டுக் கிளம்புங்கள்!! என்று சிங்களவர்கள் கொக்கரிக்காமலிருக்க முடியுமா!!

இலங்கையிலுள்ள தமிழ் மரபினர் என்ன நிலையில் உளர்? என்னநிலை பெறுவர்?

நமக்காகப் பரிந்து பேசுவார் லால்பகதூர் என்றெண்ணிக்கிடந்தோமே! அவர் பண்டாரநாயகாவின்

(16-ம் பக்கம் பார்க்க)

# கைதி எண் 6342



8-11-1964.

## தம்பி!

வேலூர் சிறையில் நாங்கள் இருந்த பகுதியில், நூற்றுக்கணக்கான கிளிகள்! பெரிய பெரிய மரங்கள் அங்கு, அவைகளிலே பொந்துகளை அமைத்துக் கொண்டு, ஏராளமான கிளிகள் இருந்து வந்தன. கும்பல் கும்பலாகக் கிளம்பி, கிறீச்சிட்டபடி அந்தக் கிளிகள் ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு பறந்து போகும் அழகை, நாளெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம், மாலை வேளைகளில், நண்பர்கள் வடிவேலு, ராஜகோபால் ஆகியோருடன் உலவும்போது, கிளிகளைக் கண்டு மகிழ்வோம்.

உட்பக்கம் உள்ளனவோ என்னவோ, இங்கு கிளிகளே இல்லை.

இத்தனைக்கும் பெரிய அரச மரமும், வேம்பும் இங்கு உள்ளன; கிளிகளைக் காணோம்.

வேலூர் சிறை, ஊருக்கு வெளியே, ஒரு சிறு குன்றுக்கு அருகே அமைந்திருப்பதால், சிறைக்குள்ளே, நிறைய மரங்கள் உள்ளன. நான்கூட, ஒரு அரசங்கன்று நட்டுவைத்தேன்; அது நன்றாக வளர்ந்திருப்பதாக, பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்யப்பட்டு சில மாதங்கள் அதே வேலூர் சிறையில் இருந்து விட்டுவந்த கம்யூனிஸ்டு நண்பர் அனந்தநம்பியார் என்னிடம் சொன்னார்.

சென்னைச் சிறை, நெருக்கடி நிரம்பிய ஊர்ப்பகுதியில் இருக்கிறது. ஆகவே, அது, ஆட்களை அடைத்து வைக்கும் கிடங்காக மட்டுமே இருக்கமுடியும்.

காக்கைகளை மட்டுமே கண்டு சலித்துப்போனேன்—அன்பழகன்தான் ஒரு மாலை, இரண்டு மைனாக்கள் இருப்பதைக் காட்டினார். ஒவ்வொரு மாலையும், அவைகளைக் காண்பதில் சில நிமிடங்களைச் செலவிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

கிளிகளை வளர்ப்பதில், ஆயுட்கால தண்டனை பெற்ற கைதிகளுக்கு சிறிது சலுகை காட்டப்படுகிறது என்று தோன்றுகிறது. வேலூரிலும் பார்த்தேன், இங்கேயும் முன்பு பார்த்திருக்கிறேன், நீண்ட காலத் தண்டனை பெற்ற சிலர், கிளிகளை வளர்க்கிறார்கள். வேலூரில், ஒரு கைதி அணில் வளர்த்துக்கொண்டிருந்தார்—மணி! மணி! என்று அந்தக் கைதி குரல் கொடுத்ததும், அந்த அணில் மரத்திலிருந்து வேகமாக இறங்கி ஓடிவந்து, அந்தக் கைதியிடம் விளையாடும்விதமாக, பழக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இன்று இரவு, இரண்டு துணைகள்—தோழர்கள் பொன்னுவேல்—வெங்கா.

கடந்த பொதுத்தேர்தல், வரப்போகிற பொதுத் தேர்தல், தொகுதிகளின் அமைப்புகள் நிலைமைகள் ஆகியவை பற்றிச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

பொதுவாக அரசியல் துறையில் காட்டுத்தனம் மேலோங்கிக்கொண்டு வருவதுபற்றி, காலையில் மதியழகனுடன் பேசிக்கொண்டிருந்தேன். நண்பர் கே. எம். பாலசுப்பிரமணியம் எழுதிய தென்னாட்டுப்பிரமுகர்கள் என்ற ஆங்கிலப் புத்தகத்தை அவர் படித்துக் கொண்டிருந்தார், அதை யொட்டி அந்தப் பேச்சு வளர்ந்தது. அந்த நாட்களிலே இருந்த அரசியல் பிரச்சார முறைக்கும் இப்போது அரசியல் பிரச்சாரத்திலே தரம் கெட்டுக்கொண்டு வருவதுபற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். பொன்னுவேல், அடுத்து வரப்போகும் பொதுத் தேர்தல் குறித்துப் பேசியபோது, தனது பிடியை இழந்துகொண்டுவரும் ஆத்திரத்தில் காங்கிரஸ் கட்சியினர் வரப்போகும் பொதுத் தேர்தலில் என்னென்ன காட்டு முறைகளைக் கட்டவிழ்த்துவிடப் போகிறார்களோ என்று எண்ணி ஆயாசப்பட்டேன்.

பிறகு, ஆப்பிரிக்க நாட்டு, 'ஜுலு' இன மக்களைப் பற்றிய தகவலைப் பின்னணியாகக் கொண்ட ஒரு கதைப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன்.

ஜுலு மக்களுக்குள் மூண்டுவிடும் பகை, நடைபெறும் போர், வெட்டி வீழ்த்துவது, கொளுத்தி நாசமாக்குவது, பெண்களை இழுத்துச் செல்வது, மாடு கன்றுகளை மடக்கிக்கொண்டு போவது போன்ற சம்பவங்கள் நிரம்பிய புத்தகம் அது. ஒரு அரை மணி நேரத்துக்குள், நிரம்ப இரத்த வெள்ளம்! இன்றைக்கு இதுபோதும் என்று ஆகிவிட்டது—புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, நண்பர்களைப் பார்த்தேன்—அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறார்கள்! நானும் முயற்சிக்கப்

போகிறேன்—அவர்களுக்குச் சமமாகஆக முடியவே முடியாது, என்றாலும், ஓரளவுக்காகிலும், பார்க்கவேண்டாமா, இல்லையானால், அவர்கள் என்ன எண்ணிக் கொள்வார்கள், சே! என்ன அண்ணன் இவன்! ஒழுங்காகத் தூங்கக்கூடத்தெரியவில்லையே என்றுஎண்ணிக் கொள்வார்களல்லவா. அதனால், தூங்கியாகவேண்டும். மணியும் ஒன்று அடித்துவிட்டது.

5—3—64

இன்று, ராணி, பரிமளம், அ. க. தங்கவேலர் மூவரும் என்னைக் காணவந்திருந்தனர். பல நாட்களாக பரிமளத்தை எதிர்பார்த்திருந்து ஏமாற்றமடைந்திருந்த எனக்கு இன்று மூவரையும் கண்டதும், மிக மகிழ்ச்சி ஏற்பட்டது. பரிமளம் வராமலிருந்ததற்குக் காரணம்; இடையில் நாவலரும், கருணாநிதி, எம். ஜி. ஆர். வந்து போனதால், தன்னை அனுமதிக்கமாட்டார்கள் என்று எண்ணிக்கொண்டதுதான் என்று தெரியவந்தது. இனி மாதத்துக்கு ஐந்து முறை என்னைக் காணவரலாம் என்பதைக் கூறினேன். என் பெரிய மருமகப்பெண் சென்னை வந்திருப்பதை அறிந்தேன். என்னைக் காண்பதற்காக, இன்னும் இரண்டுவாரங்கள் கழித்து வரட்டும் என்று சொல்லி அனுப்பினேன். அல்லி அச்சகம் நடத்த இளங்கோவனுக்கு அனுமதி கிடைத்துவிட்டதாகப் பரிமளம் சொல்லக்கேட்டேன். காஞ்சீபுரம் நகராட்சி மன்றத் தலைவர் தேர்தல் சம்பந்தமான நிலைமைகளை, அ, க. தங்கவேலர் கூறினார். என்ன காரணமோ தெரியவில்லை, அ. க. தங்கவேலர், மிக இளைத்து, கருத்துப்போய் காணப்பட்டார். அதுபற்றி அவரிடம் கேட்கலாம் என்று நான் எண்ணிக்கொண்டிருக்கும்போதே, அவர், நான் இளைத்துப்போயிருப்பதாக உணர்ந்து காரணம் கேட்டார். சென்னையில் நாவலர், கருணாநிதி ஆகியோர், மேல்சபைகளுக்கான நியமனம்பற்றிய சிக்கலால் மெத்தத் தொல்லைப்பட்டுக் கொண்டிருப்பதாகப் பரிமளம் கூறக்கேட்டு, மிகவும் கவலைப்பட்டேன். எதிர்க்கட்சிகள் கொடுக்கும் மூர்க்கத்தனமான தொல்லைக்கு ஈடுகொடுத்துக்கொண்டு கழகப் பணியாற்றிவரும் இவர்களுக்கு இந்தத் தொல்லையும் வந்து சேர்ந்திருக்கிறது. எல்லாவற்றையும் அமைதி இழக்காமல், பிரச்சினைகளைப் பல்வேறு கோணங்களிலுமிருந்து ஆராய்ந்து பார்த்து நல்ல முடிவு எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அடுத்தவாரம், அனேகமாக என்னைக் காண, கருணாநிதியும் நெடுஞ்செழியனும் வரக்கூடும் என்று நினைக்கிறேன்.

நமது கழகத்துக்காக சென்னை தேனாம்பேட்டையில் வாங்கியுள்ள புதிய மாடிக் கட்டிடத்தின் படம் 'நம் நாடு' இதழில் வெளியிடப்பட்டிருந்தது. அழகிய கட்டிடம்; எடுப்பாகவே உள்ளது; கட்டிடம் உள்ள இடமும் நல்ல 'மையமான' இடம். என்னுடன் சிறையில் உள்ள நமது தோழர்கள், படத்தைப் பார்த்து, நல்ல கட்டிடம் என்று மதிப்பிட்டுப் பாராட்டினார்கள். நான் 'பரோல்' காலம் முடிந்து, மீண்டும் சிறை புக, சென்னை வந்த அன்று, இந்தக் கட்டிடத்தைப் பார்த்து, வாங்கலாம் என்று இசைவு அளித்திருந்தேன். 'நம்நாடு' அலுவலகத்தை ராயபுரம் அறிவகத்திலும், கழக தலைமை நிலையத்தை, இந்தப் புதிய கட்டிடத்திலும் வைத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

மாநகராட்சி மன்றத்தார், லாரிகள் வாங்கியது முறைகேடானது என்று பழிசுமத்திப் பேசியதோடு மட்டுமின்றி, இந்த ஏற்பாட்டைத் தடுத்திட வேண்டும் என்று கேட்டு, கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில், வழக்குத் தொடுத்திருந்தார்; பொதுஉடைமைக் கட்சியினரான பாரிஸ்டர் மோகன் குமாரமங்கலம் (டாக்டர் சுப்பராயனார் மகன்) கம்யூனிஸ்டு உறுப்பினர் சார்பில் வாதாடினார்—மாநகராட்சி மன்றத்தின் வழக்கறிஞராக உள்ள டி. செங்கல்வராயன், மாநகராட்சிக்காக வாதாடினார். வழக்கை விசாரித்த நீதிபதி வீராசாமி அவர்கள், லாரிகள் வாங்கப்பட்டதில் தவறோ, முறைகேடோ இல்லை என்று தீர்ப்பளித்து, கம்யூனிஸ்டு உறுப்பினர் புகுத்திய வழக்கைத் தள்ளிவிட்டார் என்ற செய்தி இன்று பல இதழ்களில் வெளியிட்டிருந்தனர். லாரி சம்பந்தமாகப் பழிசுமத்தியே இந்தத் தேர்தலில் தி. மு. கழகத்தை ஒழித்துக் கட்டிவிடலாம் என்று, மாற்றுக்கட்சியினர் மனப்பால் குடித்தனர். தேர்தல் முடிவு மட்டுமல்ல, உயர்நீதிமன்றத் தீர்ப்பும், தி. மு. கழக நிர்வாகத்திலே தவறோ முறைகேடோ இல்லை என்பதை எடுத்துக்காட்டிவிட்டது.

தேர்தலுக்கு முன்பே இதுபோன்ற 'தீர்ப்பு' கிடைத்திருக்குமானால், தேர்தல் கூட்டத்திலே வழியவிட்ட ஆபாசம், கொஞ்சம் குறைந்திருக்கக்கூடும்.

இன்று பிற்பகல் கருணாநிதி, நடராசன் ஆகியோர் மீது 'உடந்தை'யாக இருந்ததாகத் தொடரப்பட்டுள்ள வழக்கையொட்டி, சென்னை உயர்நீதி மன்றத்திலே தொடர்ந்துள்ள வழக்குபற்றி மதியிடம் பேசிக்கொண்டிருந்தேன். 107-வது பிரிவுப்படி இருவரும் குற்றம் இழைத்திருக்கிறார்கள் என்பதற்காக போலீஸ் தரப்பில் என்னென்ன எடுத்துக்கூறப்படும் என்பதுபற்றி, மதி விவரமாகச் சொன்னார். எனக்கென்னமோ, அவர்கள் மதுரை சென்றதும், அறப்போர் வீரர்களைக் கண்டு பேசியதும், மாலை அணிவித்ததும் குற்றமாக முடியாது என்று பட்டது; அதுபற்றி நான் எடுத்துக்கூறினேன். உயர்நீதிமன்றத் தீர்ப்பு எப்படி இருக்கிறது என்பதை அறிய மிக ஆவலாக இருக்கிறோம்.

புதிதாகச் சிறை புகுந்துள்ள ராமசாமியிடம் இன்று காலை பல்வேறு விஷயங்கள்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அவருடைய சிற்றப்பாவும் என் நண்பருமான தக்கோலம் செல்லப்பாவின் நலம்பற்றிக் கேட்டறிந்து கொண்டேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் வரப்போகும் பொதுத் தேர்தலில், நமது கழகத்துக்கு வெற்றிக்கான வாய்ப்பு அதிக அளவிலே இருப்பதாக ராமசாமி கூறினர்—காரணங்களையும் விளக்கினர்.

'கோட்டிக்கொளல்' என்ற சொற்றொடர், 'அவை அறிதல்' அதிகாரத்தில் ஒரு குறளில் வருகிறது; நேற்று இரவும் இன்று பகலும், அந்த சொற்றொடருக்கான, பொறுத்தமான பொருள்பற்றி எண்ணிப் பார்த்துத் தெளிவு பெறுவதிலேயே மும்முரமாக ஈடுபட்டிருந்ததாக அன்பழகன் கூறினர்.

உலவி எனக்கு மகிழ்வளித்த புருக்களைக்காணும். சிறை அதிகாரி வீட்டு முற்றத்துக்கு அவை போய்ச் சேர்ந்தன என்கிருர்கள்.

கிளிகளே இங்கு இல்லையே என்பதுபற்றி இன்று அன்பழகனிடம் பேசிக்கொண்டிருந்தபோது, இரண்டு கிளிகள் சில வேளைகளில் பறந்து வருவதாகவும், தான் பார்த்ததாகவும் சொன்னர். அவர் சொன்னபடியே, இன்று ஐந்துமணி சுமாருக்கு, இரண்டு கிளிகள் பறந்து சென்றிடக் கண்டேன்,

காஞ்சீபுரம் நகராட்சி மன்றத் தேர்தலில் தோல்வி கண்ட நண்பர் ராஜகோபால் இன்றுவரை, பரிமளத்தைக் காணக்கூட வரவில்லையாம், எங்கள் வீட்டுக்கும் வரவில்லையாம். விந்தையான இயல்பு! தேர்தல் தோல்வியை ஏதோ தன்னுடைய சொந்த மதிப்புக்கு ஏற்பட்டுவிட்ட கேடு என்று எண்ணிக்கொண்டு மனதைக் குழப்பிக்கொள்வதுடன், தோல்வி காரணமாக எழும் எறிச்சலை எவர்மீதாவது காட்டும் இயல்பு சிலருக்கு இருக்கிறது. அந்த இயல்பின்படி ராஜகோபாலின் போக்கு அமைந்திருக்கிறது. மக்களாட்சி முறையிலே நம்பிக்கை உள்ள எவரும் தேர்தலிலே வெற்றி கிடைக்காமற் போய்விடுவதை பெரிய விபத்தாகவோ, தமது சொந்த தன்மானத்துக்கு ஏற்பட்டுவிட்ட களங்கமென்றோ எண்ணிக்கொள்வது மிகத்தவறு. அந்தவிதமான எண்ணம் கொண்டு, தமது மனத்துக்குத் தாமே வேதனையைத் தேடிக்கொள்வது மிகமிகத் தவறு.

இன்று, பீடர்பெலின்சன் என்பவர் எழுதிய அடக்குமுறைபற்றிய ஏட்டிலே, ஒரு பகுதியைப் படித்தேன். மனதை உருக்கும் விதமான பிரச்சினை விளக்கம். இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு உலகிலே, பல நாடுகளில், தாம் இருக்கும் நாட்டு துரைத்தனம் ஏற்றுக்கொள்ளாத சில கருத்துக்களைக் கொண்டிருந்த காரணத்துக்காகக் கொடுமைப்படுத்தப்பட்ட ஒன்பது பேருடைய வரலாற்றுத் தொகுப்பு இந்தப் புத்தகம். பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் எனும் புனிதமான உரிமைகளை ஆதிக்க அரசுகள் எப்படி அழிக்க முனைகின்றன என்பதை எடுத்துக்காட்ட எழுதப்பட்ட புத்தகம். ஒரு தூய கொள்கைக்காக அறப்போரில் ஈடுபட்டு, சிறைப்பட்டுள்ள என்போன்ருருக்கு, இத்தகைய ஏடுகளைப் படிக்கும்போது, புதியதோர் உறுதி ஏற்படுவது இயற்கை. கொள்கைக்காக, ஆபத்துக்களை துரும்பென மதித்து, வாழ்க்கையிலே பெரும் பெரும் ஆபத்துக்களைத் தாமாக வருவித்துக்கொண்டவர்களைப் பற்றிப் படிக்கும்போது, நான் சிறையிலே அடைக்கப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள இன்னல்களைப் பெரிதென்று கூற மனம் இடம்தராது. பலர் தமது கருத்துகளுக்காக, நெருப்பாற்றிலே நீந்தி இருக்கிருர்கள். அவர்களின் வரலாறுகளைப் படிக்கப் படிக்க, நாம் எத்தகைய இன்னலையும், ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும் என்ற உறுதி ஏற்படத்தான் செய்கிறது. தூய உள்ளத்துடனும் மன உறுதியுடனும், அறப்போரில் ஈடுபட்டபடி இருக்கும் நமது கழகத் தோழர்களைப் பாராட்டியபடி, படுக்கச் செல்கிறேன்.

**6—3—64**

பறவைகளிலே சில, பொந்துகளிலே அடைபடச் செல்லாமுன்பே, எங்களை அறையில் கொண்டுவந்து அடைத்துவிட்டு, சிறைக் காவலாளிகள் 'அப்பா! தொல்லை தீர்ந்தது' என்று எண்ணிக்கொண்டு போய் விட்டனர். காலை முழுவதும், ஒருவரோடொருவர் பேசி, ஒன்ருக உலவிட இருந்த வாய்ப்பு, மாலை 6 மணிக்கெல்லாம் பறிபோய்விடுகிறது. மூன்று நான்கு நாட்களுக்கு முன்பு, சிறை மேலதிகாரியிடம், மதி நாங்கள் உள்ள பகுதியிலே உள்ள தனி இரும்புக்கம்பிக் கதவை பூட்டிவிட்டு, எங்களை அறைகளிலே போட்டுப் பூட்டாமல், விட்டுவைக்கக் கூடாதா? முன்பு அவ்விதம் நிலைமை இருந்ததே என்று கேட்டார். "அது முன்பு!" என்று கூறிவிட்டுச் சென்ருர் சிறை மேலதிகாரி. அந்த சொற்றொடருக்கு எத்தனையோ ஆழ்ந்த பொருள் இருக்கத்தான் செய்கிறது. சிறையின் உட்புறப் பகுதியிலே தான், பெரும்பாலான 'கைதிகள்' உள்ளனர்; அங்கு இரவு 9, 10 மணிவரையில் பாட்டும் பேச்சும் பலமாக இருக்கும். நாங்கள் இருக்கும் பகுதியில், ஆறுமணிக்கெல்லாம் அடைத்துவிடுகிருர்களே, உடனே ஒரு சந்தடியற்ற நிலை ஏற்பட்டுவிடும். பலர், இரவு பத்து மணிக்குள் தூங்கிவிடுகிருர்கள்—எனக்கோ இரவு ஒரு மணியோ, இரண்டு மணியோ!!

வழக்கம்போல, இன்றும் காலையிலே சிறிதுநேரம், சமையல் காரியத்தில், பார்த்தசாரதிக்குத் துணையாக இருந்தேன். சமையல்பொறுப்பு முழுவதும் பார்த்தசாரதியுடையதுதான், என்றுலும் இதையிதை இப்படிஇப்படிச் செய்யலாம் என்று கூறுவதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி. சிறையிலே சமயல் செய்வதற்குத் தனித் திறமை வேண்டும். வேக மறுக்கும் அரிசி, பருப்பு, காயாத விறகு, சுவையும் மணமும் பறிமுதல் செய்யப்பட்டுவிட்ட பண்டங்கள், இவைகளைக்கொண்டு, 'இன்னமுது' சமைப்பது என்ருல் இலேசானகாரியமல்ல. எண்ணெய் போதுமான அளவு இல்லை என்று தெரியவந்ததும், 'தாளிப்பு' ஓப்புக்கு என்ருகிவிடும். காய்கள் முற்றிப்

போனதாக ஒவ்வொரு நாளைக்குத் தந்துவிடுவார்கள்— அன்று விதைகள் மிதக்கும் குழம்புதான் கிடைக்கும். என்றாலும், நாங்களே சமைத்துச் சாப்பிடுவதிலே ஒரு தனி மகிழ்ச்சி எழத்தான் செய்கிறது.

நல்ல குடும்பத்திலேதான் பிறந்தேன்; நல்லபடிதான் வளர்த்துப் பெரியவனாக்கினார்கள், நாலு பேர் என் பேச்சைக் கேட்டு நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் கிராமத்தில்! அந்த நிலையிலுள்ள நான் இங்கு வந்து, கட்டுப்பட்டு, காவலுக்கு உட்பட்டு இருக்க வேண்டி நேரிட்டுவிட்டது" என்று நண்பர் ராமசாமி, இன்று பார்த்தசாரதியிடம் சொல்லிக் குறைபட்டுக் கொண்டதாகக் கேள்விப்பட்டேன். ஒரு பேச்சுக்காக அவர் அவ்விதம் சொன்னாரே தவிர, சிறையிலே, ஆர்வம் குன்றாமல்தான் இருக்கிறார்.

சட்ட மன்ற அலுவலகத்திலிருந்து, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை சம்பந்தப்பட்ட புத்தகங்களெல்லாம், அவருக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஒழுங்காகப் படித்து குறிப்புகள் எடுத்துவைத்திருக்கிறார். சிறை நிலைமைகள் பற்றியும், நீதி நிர்வாகத் துறைகளின் நிலைமைகள் குறித்தும், சட்டசபையில் பேசுவதற்கான ஒரு சிறு சொற்பொழிவே தயாரித்துவிட்டிருக்கிறார்.

இன்று பிற்பகல், அன்பழகன், சுந்தரம், பொன்னுவேல், ஆகிய மூவருடன், புரசவாக்கம் வட்டத்தின், அரசியல் நிலைமை பற்றியும், கழகத்தின் பிடிப்பு எந்த விதம் இருக்கிறது என்பதுபற்றியும், பேசிக்கொண்டிருந்தேன்.

சிறையில், இதுபோலப் பேசுவது உடனடியாகப் பலன் அளிக்காது என்றபோதிலும், ஒவ்வொரு வட்டத்திலும் நிலவும் அரசியல் நிலைமைகள்பற்றி. இதுபோல, வெளியிலே, கலந்து பேசினால், மெத்தப் பலனளிக்கும் என்பதை உணரமுடிந்தது.

பொதுக்கூட்டங்களிலே, பேசிவிட்டுச் செல்வதுடன் திருப்தி அடைந்துவிடாமல், அந்தந்த வட்டத்தில், பணியாற்றும் தோழர்களுடன் கலந்து பேசுவது, நிலைமைகளை உணரவும், கழக வெற்றிக்கான வாய்ப்புகளை உறுதிப்படுத்தவும் மெத்தவும் பயன்படும்.

இன்று மாலை அன்பழகனை; அவருடைய துணைவியார் வெற்றிச்செல்வி, காண வந்திருந்தார்கள். அன்பழகனுடைய மகனை, நாய் கவ்விக் கடித்துவிட்டதாகச் செய்தி கூறிக் கவலைப்பட்டிருக்கிறார்கள். அன்பழகனும் மிகுந்த கவலைப்பட்டபோதிலும், தமது உணர்ச்சியை அடக்கிக்கொண்டு, என்னிடம் இந்தச் செய்தியைக் கூறினார். மருத்துவருடைய யோசனையின்படி, தக்கது செய்யும்படி துணைவியாரிடம் கூறி அனுப்பி இருக்கிறார். நாய்க்கடி, கடித்தநாய் வெறிகொண்டதாக இருந்தாலொழிய, ஆபத்தானதாகாது; என்றாலும் தக்க மருத்துவ முறைகளை மேற்கொள்வதுதான் நல்லது அன்பழகனுடைய மைத்துனர் ராஜசுந்தரம், திறமை மிக்க மருத்துவர்; அவர் தக்க முறையை மேற்கொள்வார் என்று நம்புகிறேன்.

நேற்று படித்த "கொள்கைக்காக கொடுமைக்கு ஆளானவர்கள்" பற்றிய புத்தகத்தை இன்றும் தொடர்ந்து படித்தேன்.

நீக்ரோக்களுக்குச் சமஉரிமை அளிக்கவேண்டும் என்பதற்காக, அறநெறிக் கிளர்ச்சிநடத்தும் அமெரிக்க வெள்ளையருக்கு, நிறவெறி பிடித்த வெள்ளையர்களால் ஏற்பட்ட கொடுமைகளை நூலாசிரியர் விளக்கிஇருந்தார். நீக்ரோக்களும் அமெரிக்கர்களே; நிறம் காரணமாக அவர்களை ஒதுக்கிவைப்பதும், தாழ்வாக நடத்துவதும் மிகக்கொடுமை; அது மனிதத்தன்மையையே மாய்த்திடும் இழிதன்மையாகும், என்று இந்த அமெரிக்க வெள்ளையர், பல இன்னல்களுக்கிடையில், எதிர்ப்பு ஏசல் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், எடுத்துக் கூறிக்கொண்டு வருகிறாராம். சமஉரிமைக்காக நீக்ரோக்கள் மேற்கொள்ளும் அறப்போரில் இவர் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்; கொடுமைகள் பல இவருக்கு இழைக்கப்பட்ட போதிலும் மனம் தளராமல் தொண்டாற்றிக்கொண்டு வருகிறார். நிறவெறி பிடித்த அமெரிக்க நாட்டு வெள்ளையர், குடிஅரசுத் தலைவர் கென்னடியைக் கொலை செய்யும் அளவுக்குச் சென்றுவிட்டதைக் கண்ட பிறகு, கருப்பருக்கு சமஉரிமை கேட்டுக் கிளர்ச்சி செய்யும், இந்த வெள்ளையருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் வியப்பளிக்கவில்லை. ஒரு மோடாரில், எப்போதும் பயணம் செய்தபடி இருக்கிறாராம். மோடாரில், பிரசாரப்படம் ஒன்று எழுதப்பட்டிருக்கிறதாம் உலகத்தின் படம்போட்டு, அதனைத்


**அண்ணாவின்**
கருத்தோவியங்கள்

| | |
|---|---|
| பாவையின் பயணம் | ரூ. 1-50 |
| அரசாண்ட ஆண்டி | ரூ. 1-50 |
| மதுரைக்கு டிக்கெட் இல்லை | ரூ. 2-00 |

கிடைக்குமிடம்:
**பரிமளம் பதிப்பகம்**
சின்ன காஞ்சிபுரம்.

தாங்கிப் பிடித்துக்கொண்டிருப்பதாக இரண்டு கரங்கள் நீட்டப்பட்டிருக்கிறதாம்; ஒரு கரம், கருப்பு நிறமுடையது; மற்றென்று வெள்ளை!

சிறையில், இந்தச்சீலர் தள்ளப்பட்டார் ஒருமுறை; சிறை அதிகாரிகள், பல்வேறு குற்றங்கள் செய்ததால் சிறையில் இருந்த கயவர்களிடம், இந்த வெள்ளையன், கருப்பருக்குத் துணையாக இருக்கிறன் என்ற செய்தியைக்கூறி, நீக்ரோவுடன் கைகுலுக்கிக்கொண்டிருக்கும் முறையில் இருந்த ஒரு படத்தையும் காட்டினர்களாம். இதைக் கண்ட உடனே, அந்தக் கயவர்கள்—கொலை, கொள்ளை, வழிப்பறி, வஞ்சகம், சூது, கற்பழித்தல்போன்ற குற்றங்களைச் செய்த பாதகர்கள், வெள்ளையரின் புனிதத்தன்மையை, உயர்வை, பாழாக்குபவனு இவன் என்று உறுமி எழுந்து, பலமாகத் தாக்கிவிட்டார்களாம். இந்தப் பகுதியைப் படிக்கும்போது, உண்மையாகவே கண்கலங்கும் நிலை ஏற்படுகிறது.

நேற்றும் இன்றும், எழுத்தாளர்கள் பிரச்சினையை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட, இரண்டு கதைப் புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. எழுத்தாளர்களை ஏய்த்துக் கொழுத்திடும் புத்தக வெளியீட்டார்பற்றிய கண்டனத்துடன், ஒரு உருக்கமான கதையைப் பின்னி ஒரு நூல் எழுதப்பட்டிருந்தது. மற்றென்று, சாமர்செட்மாகாம் எழுதியது; எழுத்தாளர் பற்றி மற்றேர் எழுத்தாளர் கொண்டுள்ள கருத்துகளையும், அவர்களுக்குள் ஏற்படும் தொடர்புகள்பற்றியும், புகழ்பெறு முன்பு எழுத்தாளர் எந்த நிலையில் இருக்கிறர் என்பதுபற்றியும், மாகாம் எழுதியிருக்கிறர்.

இன்றைய பத்திரிகையில், சென்னை மேல்சபையில், முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும், டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரும், டில்லி மத்தியசர்க்காரின் போக்கையும், அவர்கள் ஆட்டிப் படைப்பதற்கு ஏற்றபடி கிடக்கும் மாநில சர்க்காருடைய அடிமைப் போக்கையும், மிக வன்மையாகக் கண்டித்துப்பேசியது வெளியிடப்பட்டிருந்தது. ஓமந்தூரார், காங்கிரஸ் ஆட்சியின் போக்கைப் பல முறை கண்டித்திருக்கிறர். என்றாலும், முன்னாள்முதலமைச்சர் தமது தள்ளாமையைக் காரணமாகக் காட்டக் கூடுமென்றாலும், இந்த கருத்துகளை, சட்டசபையில் எடுத்துச் சொல்வதோடு நின்றுவிடுவது சரியல்ல—அறமுமாகாது—மக்கள் மன்றத்தில் இவைகளை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறர். மக்களிடம் சென்று அவர் இந்த ஆட்சியின் போக்கைக் கண்டித்துப் பேசினால்தான், ஆட்சியின் போக்கு மாறுவதற்கு ஒரு வழி ஏற்படும். ஏனோ அவர், தம்மால் செய்யக்கூடிய 'சேவை'யைச் செய்திடாமல், இருந்து வருகிறர். தன்னலமற்றவர் என்று நாடு கொண்டாடும் நிலைபெற்ற ஓமந்தூரார், உண்மையை ஊருக்கு எடுத்துச்சொல்லி, ஆளவோரைத் திருத்த ஏன் தயக்கம்காட்டுகிறர் என்று எனக்குப் புரியவில்லை. அனுபவம் பெற்றவர்களும், ஆற்றல்மிக்கவர்களும், இவ்விதம் தயக்கம் காட்டும் போக்கிலே இருப்பது, வேதனை அளிக்கிறது என்றாலும், ஓரோர் சமயம் சட்டமன்றத்திலேயாகிலும் அவர்கள், மனம் திறந்து பேசுவது நாம் மேற்கொண்டுள்ள பணியினைத் தொடர்ந்து செய்வதற்கான பேரார்வத்தை ஊட்டுகிறது. இந்தி வெறி எந்த அளவுக்குச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை டாக்டர். இலட்சுமணசாமி முதலியார் மிகத் தெளிவாக — துணிவாகக் கூட—எடுத்துக்காட்டி இருக்கிறர். அவர் காங்கிரசிடமிருந்து பதவியைப்பறித்துக்கொள்ள 'கட்சி' நடத்துபவர் அல்ல; தமது வாழ்நாளில் பெரும் பகுதியைக் கல்வித்துறைக்காகச் செலவிட்டுவரும் அறிவாளர். அவருடைய மேல்சபைப் பேச்சு, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நாம் நடத்தும் அறப்போர் எத்துணை தேவையானது என்பதை நாடும் நாமும் உணரச்செய்வதாக

# மணிவிழா அறிக்கை

11—10—64 அன்று "காஞ்சி" இதழில் வெளிவந்துள்ள எனது மணிவிழா அறிக்கைக்கிணங்க, கீழ்கண்ட டி. எம். பி. மணிவிழா குழு ஒன்றை அமைத்துள்ளேன். மணிவிழா வெற்றிபெறக் கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும் பங்குகொள்ள விழைகிறேன்.

அன்பன்,

**அண்ணுதுரை.**

மணிவிழாக் குழுவினர்:

| | |
|---|---|
| தலைவர்: | அண்ணு அவர்கள் |
| பொருளாளர்: | எம். ஜி. இராமச்சந்திரன் |
| செயலாளர்கள்: | என். வி. நடராசன், கே. ஆர். பாலன் |
| உறுப்பினர்கள்: | காயிதேமில்லத் இஸ்மாயில் |
| | நாவலர் நெடுஞ்செழியன் |
| | மு கருணநிதி |
| | கே ஏ மதியழகன் |
| | நாஞ்சில் கி. மனேகரன் |
| | எம். ஜி. சக்கரபாணி |
| | கே. ஆர். இராமசாமி |
| | எஸ். எஸ். மாரிசாமி |
| | க. அன்பழகன் |
| | டாக்டர் சத்தியவாணிமுத்து |
| | ஏ. கோவிந்தசாமி |
| | க. இராசாராம் |
| | ஆர். ஏம். வீரப்பன் |
| | ஏ கே தங்கவேலர் |
| | அ. பொ. அரசு |
| | வி. முனுசாமி |
| | சி. வி. எம். அண்ணுமலை |

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

**புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்**
பொருளாளர்: மணிவிழாக் குழு,
160, லாயட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14

அமைந்திருக்கிறது. அவருடைய பேச்சைக் கேட்டு, காங்கிரஸ் அமைச்சர்கள் உறுப்பினர்கள்கூட, பாராட்டுக் கைஒலி எழுப்பினர் என்று பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. பாராட்டி என்ன பயன்? கையொலி எழுப்பி என்ன காணப்போகிறோம்! இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் துணிவு பெறவேண்டும்; அவருடைய பேச்சு அமைச்சர் பெருமான்களுக்கு அந்தத் துணிவைக் கொடுத்திடவேண்டும். டாக்டர், நாம் மேற்கொண்டுள்ள போராட்ட முறைகளை ஏற்றுக்கொள்பவர் அல்ல; நாமும் அவரிடமிருந்து அதனை எதிர்பார்க்கவில்லை. ஆனால், அவர் பேசியிருப்பது, இந்தி ஆதிக்க உணர்ச்சி என்பது பொய்யல்ல, இட்டுக்கட்டியது அல்ல, ஏனோதானோ என்று விட்டுவிடத்தக்கது அல்ல, பெரியதோர் ஆபத்து, எதிர்காலத்தில் இருளும் இழிவும் இந்நாட்டுக்கு மூட்டிவிடக்கூடியது என்பதை மெய்ப்பிக்கிறது. எனவே—முறைகள்பற்றிய கருத்து எவ்விதம் இருப்பினும்—பிரச்சினையின் அடிப்படையைப் பொறுத்தவரையில், நமது கருத்து, அறிவாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதனை அறிந்து அகமிக மகிழ முடிகிறது.

கல்வித்துறை வித்தகரும், ஆட்சித்துறை அனுபவம்கொண்டவரும், எந்தக் கேடு போகவேண்டும், கொடுமை நீக்கப்படவேண்டும் என்று எடுத்துக்கூறி, 'வாதாடி' இருக்கிறார்களோ, அதே நோக்கத்துக்காக, நாம் அறப்போரில் ஈடுபட்டு, சிறையில்கிடக்கிறோம், என்பதை எண்ணிப் பெருமகிழ்வுகொள்ளமுடிகிறது.

துரும்பைத் தூணாக்கிக் காட்டுகிறார்கள் என்று நம்மீது பழி சுமத்தும் 'பரந்த மனப்பான்மை'யினர், ஓமந்தூரார் மனம் நொந்து பேசியிருப்பதையும் டாக்டர் இலட்சுமணசுவாமி மிகக் கண்டிப்பான குரலில் பேசியிருப்பதையும் கூர்ந்து கவனிப்பார்களானால், தமது நிலை எவ்வளவு கேவலமானதாகிறது என்பதை உணருவார்கள். வெளியில் இருந்து படிப்பதைவிட, சிறைக்கு உள்ளே இருந்துகொண்டு, அந்த இரு முதியவர்களின் பேச்சுக்களையும் படிக்கும்போது, தனிச் சுவையும், எழுச்சியும் பெறமுடிகிறது.

7—3—64

பொதுவாழ்க்கைத் துறையில் ஈடுபட்டு, சிறைப்பட நேரிடுபவர்களுக்கெல்லாம், கைதிகளை நல்லவர்களாக்கும் முறை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது—சிறையில் இருக்கும்போது. சிறையில் பலவிதமான குற்றங்களுக்காக அடைக்கப்பட்டிருப்பவர்களிடம், பழகவேண்டிய நிலை இருப்பதும், அந்த நிலை காரணமாக அவர்களுடன் பேசி அவர்கள் 'கதை'யைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பும், அவர்கள் கூறுவது கேட்டு மனம் இளகுவதும், இங்கு இயற்கையாகவே ஏற்பட்டுவிடுகிறது. சிறையில், சீர்திருத்தம் வேண்டும் என்பதுபற்றி, இன்று மாலை, பொன்னுவேல் மெத்த ஆர்வத்துடன் பேசத்தொடங்கினார். பொன்னுவேல் உட்புறப் பகுதியில் இருந்தநாட்களில், தண்டனை பெற்று உள்ளே உள்ள கைதிகள், தமது தண்டனையைக் குறைக்கவேண்டுமென்றும், விடுதலை அளிக்க வேண்டும் என்றும் துரைத்தனத்துக்கு, 'மனு' அனுப்பும் காரியத்தில் தொண்டு புரிந்திருக்கிறார். சட்டக் கல்லூரியில் படித்தவர்—படித்தவர் என்று மட்டும்தான் கூற முடிகிறது—வழக்கறிஞர் என்று சொல்லும் பாக்கியத்தை, நான் பெறவில்லை. வழக்கறிஞர் ஆகாவிட்டாலும், சட்டக்கல்லூரியில் படித்ததாலும், சட்டப் புத்தகங்கள் 'கைவசம்' இருப்பதாலும், மனுக்கள் தயாரித்துக்கொடுக்க முடிந்திருக்கிறது. இதன் காரணமாக, 'கைதிகள்', வெளியே போகும்போது 'மனிதர்கள்' ஆக மாற்றி அமைக்கப்படவேண்டும் என்பதுபற்றி, ஆர்வத்துடன் பேசமுடிந்தது. இந்த ஆர்வத்தையோ, சீர்திருத்தவேண்டும் என்ற துடிப்பையோ யாரும் குறைகூற முடியாது—பாராட்டக்கூடச் செய்யலாம். ஆகவே நானும் அந்த நோக்கத்துக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு, பிரச்சினையில் உள்ள சிக்கல்கள் பற்றியும் விளக்கிக் கூறினேன்.

சிறையிலிருந்து வெளியே செல்பவர்கள் 'நல்லவர்களாக' மாற்றப்பட வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம், வெளியே உள்ளவர்கள் சிறைக்கு வரத் தேவையில்லாத நிலையை ஏற்படுத்துவது—குற்றம் செய்யவேண்டிய நிலையையும் மனப்போக்கையும், மாற்றி அமைக்க, சமூகத்திலே பெரியதோர் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுபற்றிக் கூறினேன். சென்றகிழமை நான் படித்த சட்டவரலாறு பற்றிய புத்தகத்திலும், குற்றங்களுக்குத் தரப்படும் தண்டனைகள், பயங்கரத்தை ஏற்படுத்தும்விதமாக இருக்கவேண்டுமா வேண்டாமா என்பதுபற்றி, படித்திருந்தேன். அது குறித்துப் பேசிக்கொண்டிருந்தோம்.

தூக்குத் தண்டனையை எடுத்துவிட வேண்டுமா? வேண்டாமா? என்பதுபற்றி, கருத்து தெரிவிக்கும்படி, துரைத்தனம் ஒரு கேள்வித்தாள் தயாரித்து சட்டசபை உறுப்பினர்களுக்கு அனுப்பி இருந்தனர். அது இன்று, சட்டமன்ற உறுப்பினர் ராமசாமிக்குக் கிடைத்திருந்தது. ஆகவே, தூக்குத் தண்டனை பற்றியும் பொதுவாக தண்டனை முறைகள் பற்றியும் இன்று மாலை, நாங்கள் பேசிக்கொண்டிருக்க நேர்ந்தது.

சுந்தரத்தைக் காண, நண்பர் ராதாமணாளன் வந்திருந்தார். நாம் நடத்தும் அறப்போர் பற்றியும், நாமெல்லாம் சிறைப்பட்டிருப்பது குறித்தும், நாட்டிலே ஒருவிதமான பரபரப்பும் எழவில்லை என்று அமைச்சர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றாலும், உண்மையில், மக்கள் மனதிலே, பரபரப்பு உணர்ச்சியும் பரிவும் நிரம்ப இருக்கத்தான் செய்கிறது. சென்னை மாநகராட்சித் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, காங்கிரஸ்

வட்டாரத்தினர்கூட இதனை உணர்ந்துவிட்டிருக்கின்றனர் என்று ராதாமணாளன் கூறியதாகச் சுந்தரம் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

தெளிவுள்ள மக்கள் இந்தி ஆதிக்கத்தால் விளையக்கூடிய ஆபத்தை உணர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதுபற்றி எனக்கு ஐயம் எழுந்ததே இல்லை. அதுபோலவே, தமது மனதுக்குச் சரிஎன்று பட்ட முறையில் மக்களுக்கு நலன் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தில், நாம் மேற்கொண்டுள்ள அறப்போர் குறித்து, மனதை அடகுவைத்துவிடாத எவரும், பாராட்டத்தான் செய்வார்கள் என்பதிலேயும் எனக்கு ஐயம் ஏற்பட்டதில்லை. பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருப்பவரும், காங்கிரசாரிடம் தொடர்பு கொண்டுள்ளவருமான, ராதாமணாளன் சுந்தரத்திடம் கூறியது, நான் ஏற்கனவே கொண்டிருந்த எண்ணத்தை உறுதிப்படுத்திற்று.

மதியைக்காண, அவருடைய துணைவியாரும், குழந்தையும் வந்திருந்தனர். மதியின் பெண்குழந்தை, இந்தச் சிறையை "அப்பா வீடு" என்று எண்ணிக்கொண்டு பேசுகிறதாம்! குழந்தையைப் பார்க்க வேண்டும் என்று ஆசை எழத்தான்செய்கிறது—ஆனால் எங்கே, உட்புறம் பார்த்துவிடுகிறார்களோ என்று, இரும்புக் கம்பிகளை இருப்புப் பலகைபோட்டு வேறு அடைத்துவைத்துவிட்டிருக்கிறார்களே!!

இன்று என்னைக்காண நெடுஞ்செழியன் விரும்பியிருக்கிறார்—ஆனால் அனுமதி அளிக்கப்படவில்லை. திங்கட்கிழமை வரக்கூடும் என்று சிறை மேலதிகாரி கூறிவிட்டுச் சென்றார்.

புகழ்மிக்க, எச். ஜி. வெல்ஸ் எழுதிய நூல் ஒன்று கிடைத்தது. பல ஆண்டுகளுக்கு முன்பு அவர் எழுதியது—பழைய முறைகளும் கொள்கைகளும் தளர்ந்து போய் புதிய முறைகளும் கொள்கைகளும் முளைவிடும் பருவத்தை விளக்கும் விதமாக அமைந்துள்ள ஏடு—இன்று அந்த ஏடுதான், தூக்கம் வருகிறவரையில்.

காலையில், கலைக்களஞ்சியத்தில் சில பகுதிகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் 1938-ல் சிறை புகுந்தபோது, தமிழாசிரியர் சிங்காரவேல் முதலியார், தன்னந்தனியாக இருந்து தயாரித்த 'அபிதான சிந்தாமணி'யைத்தான் படித்துக்கொண்டிருந்தேன். சென்னை, தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் பள்ளித் தமிழாசிரியரும் என் நண்பருமான எஸ். எஸ். அருணகிரிநாதர் கொடுத்திருந்தார். கலைக்களஞ்சியம், மிகுந்த பொருட்செலவில், பலவிற்பன்னர்களின் கூட்டு முயற்சியில் தயாரிக்கப்படுகிறது — அபிதான சிந்தாமணி, ஒரே ஒரு வித்தகரின் அறிவாற்றலின் விளைவு. கலைக் களஞ்சியத்தைப் பார்த்தபோது எனக்கு, 'அபிதான சிந்தாமணி'பற்றிய எண்ணமும், அதனை ஆக்கித்தந்த சிங்காரவேலர்பற்றியநினைவுந்தான் மேலோங்கி நின்றது.

அண்ணன்,

அண்ணாதுரை

## முகப்பு விளக்கம்.

அமெரிக்க நாட்டு ஜனாதிபதியாகத் திரு. லின்டன் பி. ஜான்சன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் பெற்ற வெற்றியை உலகெங்கும் உள்ள நல்லவர்கள் தாங்கள் பெற்றதாகவே எண்ணி மகிழுகின்றனர். சென்ற ஆண்டு திரு. கென்னடியின் கொடிய மறைவுக்குப் பின் அமெரிக்க நாட்டுத் தலைவராக ஆனபின்னரே திரு. ஜான்சனின் பேரும்புகழும் எங்கும் பரவியது. இந்தக் குறுகிய காலத்தில் தன் பெயர் விளங்குவதற்கான வகையில் நடந்துகொண்டவர் திரு. ஜான்சன்.

உலக மக்களின் இதயங்களில் கவர்ச்சிமிக்க ஓர்இடம் தனக்கென்று கொண்டுவிட்ட கென்னடியின் மறைவுக்குப் பின் துன்பம் சூழ்ந்திருந்த அந்த நேரத்தில் துணிவோடு தலைமையை ஏற்றுச் செயல்பட்ட வகையில் கென்னடியின் நல்வழியைப் பின்பற்றிய வகையில், ஜான்சன் பெருவெற்றி பெற்றுவிட்டார் என்பதை அறிவோம். அவரை எதிர்த்த திரு. கோல்டுவாட்டர் தனது பிற்போக்குத் தனமான கொள்கைகளை வைத்து மிகப் பெரிய வெற்றிபெற்றுவிடலாம் என்று கனவு கண்டார், ஆனால் அமெரிக்க நாட்டு மக்கள் தாங்கள் பண்பால் மிக உயர்ந்தவர்கள் என்பதை, ஜனநாயகக் கொள்கைகளில் நம்பிக்கை உடையவர்கள் என்பதை, கருப்பர்களும் மனிதர்களே என்று மதிக்கிறோம் என்பதை, இந்தத் தேர்தலில் ஜான்சனை ஆதரிப்பதின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இனிய இயல்புகளும் பண்பாடும், பொறுமையும், இரக்க எண்ணமும உடைய, இந்தத் தலைவர் தனது பதவிக் காலத்தில் உலக நாடுகளிடையே தன்னுடைய பெருந்தன்மையான செயல்களின் வாயிலாக, அமெரிகக நாட்டுககுப் புகழ் ஈட்டித் தருவதோடு தன் பெயரையும் வரலாற்றில் இடம் பெறச் செய்வார் என்று நம்புகிறோம்.

துணை ஜனாதிபதியாகத் திரு ஹூபர்ட் ஹம்ப்ரே அவர்கள தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தலைவரையும் துணைத்தலைவரையும் அவர்கள் பெற்ற வெற்றிக்காகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(ஜனாதிபதி திரு. ஜான்சனின் உருவத்தை அட்டையில் காண்பீர்.)

# அந்திக் கலம்பகம்

"பொன்னி! என்னடி இது பெரிய வம்பு வந்து சேரும்போல இருக்குதே. உங்களோட 'மகாநாடு' எப்படி நடக்கறதுன்னு பார்த்துவிடுகிறேன் என்று..."

"அது யார் ஏமு! நம்மோட மகாநாட்டைக் கெடுத்துவிடுவதாக மிரட்டுவது..."

"எங்களவர்தாண்டி பட்டு! அன்னக்கி அவர் வந்தாரல்லவா, நாம பேசிக்கொண்டிருந்தபோது. என்னமோ பேசக்கூடச் செய்தாரே ......"

"ஆமாம். நானும் பட்டுவும் போய் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனேம்..."

"போனீர்களல்லவா. அவருக்குப் பிரமாதமான கோபம். நான் உள்ளே நுழைந்ததும், அந்தப் பெண்கள் சரேலெனப் புறப்பட்ட காரணம் என்ன? நான் என்ன புலியா சிங்கமா! போக்கிரியா பொல்லாதவனு! அல்லது நீங்களெல்லாம் கூடிக்கொண்டு வம்பளப்பதை வேண்டாமென்பவனு......என்றெல்லாம் மளமளவென்று பேச்சைக் கொட்ட ஆரம்பித்தார்..."

"ஏமு! நான் நினைத்தது சரியாகத்தான் இருக்குது..."

"என்ன நினைத்தே — எங்களவர் இப்படிப் பேசுவார் என்ரு?"

"அதல்ல ஏமு! நாம பேசுவது வெறும் வம்பளப்பு என்றுதான் அவர் எண்ணிக்கொள்வார் என்று நினைத்தேன். சரியாக இருக்குது நான் எண்ணிக்கொண்டது..."

"ஏமு! என்னமோ அவர் நம்ம 'மகாநாட்டை'க் கெடுத்துவிடப் போவதாகச் சொன்னுர் என்றயே! அது என்ன? எப்படி? எங்களை வரக்கூடாது என்று தடை போடப் போகிருரா..."

"அல்லது உன்னை பீச்சுக்கோ சினிமாவுக்கு அல்லது சபாவுக்கோ அழைத்துக்கொண்டு போய்விடப் போகிருரா...?"

"அதெல்லாம் இல்லை பொன்னி! நாம கூடிப் பேசுகிற அதே நேரத்தில் அவர் தன்னுடைய சினேகிதர்கள் நாலு பேரை அழைத்துக் கொண்டு வந்து, இந்த வீட்டிலேயே வேறே ஒரு பக்கத்திலே, ஆனு நமக்கு அருகாமையிலேயே உட்கார்ந்து தனி மகாநாடு நடத்தப் போகிருராம்.;"

"வம்புக்காரர்தான் உங்களவர்! பக்கத்துப் பக்கத்து கடைகளிலே ஒரே நேரத்திலே கிராமபோன் பிளேட் போட்டு 'களேபாரம்' செய்



கிருர்களே அதைப்போல இருக்குதே அவருடைய திட்டம்.''

"இதிலே என்னடி வம்பு ஏற்படப் போகுது. ஏழுவோட வீட்டுக்காரரும் அவரோட நண்பர்களும் பேசினு நமக்கென்ன தொந்திரவு. நாமும் பேசினுத்தானே பட்டு சொல்கிற களேபாரம் ஏற்படப்போகுது. அவர்கள் பேச ஆரம்பித்ததும், அவர்கள் பேசுவதை நாம் கேட்டுக்கொண்டிருப்பமே. அவர்கள் பல நல்ல விஷயங்களைப் பேசினு, கேட்பதாலே நமக்கு நல்லதுதானே...''

"போடி! நம்ம பேச்சைக் கெடுக்க அவர்கள் வம்புக்கு வருகிறபோது; நாம விட்டுக் கொடுக்கலாமோ! ஏழு! உங்களவர், அவருடைய திட்டப்படி நடக்க ஆரம்பித்தா, நான் என்ன செய்யப்போகிறேன் தெரியுமோ.

"ஏழுவை அழைத்துக்கொண்டு வெளியே கிளம்பிவிடலாம் என்கிற யோசனையோ...''

"அது அல்லடி. அவர்கள் பேச்சிலே ஏற்படுகிற தவறுகளைக் கண்டுபிடித்து, கேலி செய்து அவர்களை வெட்கப்படும்படிச் செய்துவிடப் போகிறேன்...''

"அப்படியானு, நாமும் மெள்ள மெள்ள அவர்களுடைய மகாநாட்டிலே சேர்ந்துவிடுகிருேம்னு அர்த்தமாகுது...''

"அப்படி ஆனுத்தான் என்ன தவறு ஏழு!''

"தவறு ஒன்றும் இல்லை பொன்னி! ஆனு, நாம தனியாக் கூடிப் பேசுகிறபோது இருக்கிற சுவை அப்பொ இராது...''

"என்னமோடிம்மா! இந்த நிலைமையை நாமதான் சாமர்த்தியமா சமாளித்தாகணும்...''

"நாம எதாவது பேசும்போது மற்றவர்கள் குறுக்கிட்டுக்குதர்க்கம் பேசினு எரிச்சலா இருக்காதோ...''

"அப்படி எரிச்சல்பட்டு, நாம நம்முடைய பேச்சினுடைய போக்கிலே இருந்து மாறிவிட்டாத்தான் தவறு; கேவலம், பட்டு! உனக்கு நிறைய வழக்குகள் வந்தா, இது புரியும்...நீ ஒரு வழக்கை எடுத்து வாதித்துக்கொண்டு இருக்கறபோது, எதிர்க் கட்சி வக்கீல் உன் பேச்சை மடக்குவதற்கோ, உன் எண்ணத்தைக் குழப்புவதற்கோ குறுக்கே பாய்வார்; எதையாவது சொல்லிவைப்பார், அந்தச் சமயத்திலே, திணறக்கூடாது, குழம்பக்கூடாது, குளறக்கூடாது, வாயிலே கொழுக்கட்டை போட்டு அடைத்ததுபோலவும் இருக்கக்கூடாது...''

"அது தெரியாதா எனக்கு. ஒரு சிக்கலான வழக்கை வாதிட்டுக் கொண்டிருக்கிறபோது, எதிர்க்கட்சி வக்கீல் குறுக்கிட்டுக் குழப்பப் பார்ப்பார்...''

"ஏழு! அரசியல் கட்சிக் கூட்டங்களிலே, அதிலும் தேர்தல் கூட்டங்களிலே இப்படிப்பட்ட குறுக்குப் பேச்சு, குதர்க்கக் கேள்வி நிறைய. பார்லிமெண்டிலேகூட...''

"எதிரி, குதர்க்கம் பேசுகிறபோது கோபம் வராமலிருக்க வேண்டும்... பொறுமை வேண்டும்.''

"அது மட்டும் போதாது ஏழு! உடனே, சாமர்த்தியமாகப் பதில் சொல்லிக் குதர்க்கம் பேசினவர்களை மடக்கவேண்டும்...அந்தத் திறமை உள்ளவர்களிடம், குதர்க்கம் செய்ய பயப்படுவார்கள், யாராயிருந்தாலும் ...பார்லிமெண்ட்களிலே, இப்படிப் பல சுவையான நிகழ்ச்சிகள் நடந்திருக்குது...''

"டெல்லி பார்லிமெண்டிலேயா...''

"அங்கேயுந்தான். ஆனு அதை எல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாகப் போடக் காணேம். வெளி நாடுகளிலே இதுபோல நடைபெற்றவைகள் புத்தகமாகவந்திருக்குது...'

"எனக்குத் தெரிந்தவரையிலே பொன்னி! இங்கே, எதற்கெடுத்தாலும், கோபம், அலட்சியம், அருவருப்பு, வெறுப்பு, ஆத்திரம் இவைகள்தான் பதில்களாக வருது. நான் பார்லிமெண்டைப் பத்திச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிறேன்...''

"உண்மைதான் ஏழு! நம்மையே கேலி செய்வதாக இருந்தாக்கூட, அதையே கேலி செய்பவர்மீதே திருப்பிவிடுகிற சாமர்த்தியம் இருக்குது பாரு, அது பிரமாதம்! முன்னே இங்கிலாந்திலே முதல் மந்திரியாக இருந்தாரே மாக்மிலன் அவருடைய நிர்வாகத்தைப்பற்றி பலபேர் கண்டித்துப் பேசினர்கள். வேடிக்கை இதிலே என்ன தெரியுமோ? அவருடைய மகன்—அவன் பேரும் மாக்மிலன்—தகப்பனுருடைய நிர்வாகப் போக்கை ரொம்பப் பலமாகக் கண்டித்தான்...''

"அப்பாவாக இருந்தாக்கூட, நிர்வாகம் சரியாகஇல்லை என்ருல் கண்டிக்கவேண்டியதுதான் என்று அந்த மகனுக்குத் தோன்றி இருக்குது பார்...''

"எதிர்க்கட்சிக்காரர் ஒருவர் எழுந்து, உம்முடைய மகனே உம்மைக் கண்டிக்கிருரே, உமக்கு வெட்கமாக இல்லையா என்று கேட்டார், கிண்டலாக...''

"ரொம்பச் சங்கடமாகத்தான் இருந்திருக்கும் மாக்மில்லனுக்கு...''

"துளிகூட காட்டிக்கொள்ளவில்லை. வெட்கம் எதற்காக! பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் திறமையாக வாதாடினுர் சின்ன மாக்மிலன் அவ்வளவு அறிவுத் தெளிவும் துணிவும் இருப்பது பாராட்டத்தக்கது. அது போலவே அவருடைய அறிவுத் தெளிவுக்கும் துணிவுக்கும் காரணமாக இருந்த பெரிய மாக்மிலனும் பாராட்டப்பட வேண்டியவரே! என்ருர்...''

"பாரேண்டி சாமர்த்தியத்தை! என் மகன் மக்கு அல்ல; புத்திசாலி அவனை அப்படிப்பட்ட புத்திசாலி ஆக்கினவன் நான்தான் என்ற அர்த்தப்படும்படி பேசி இருக்கிருர் மாக்மில்லன்.''

"வின்சன்ட் சர்ச்சிலை ஒருமுறை ஒரு மாது, பார்லிமெண்டிலே மடக்கப்பார்த்தார். நீர் எனது கணவனுக இருந்தால் உமக்கு விஷம் கொடுத்திருப்பேன் என்று சொன்னுர்.''

"அவ்வளவு கொடியவர்; கொல்லப்பட வேண்டியவர் என்று அர்த்தம் இல்லையா? சர்ச்சில் கோபக்காரர் என்பார்களே. என்ன பதில் சொன்னுர்?''

"பிரமாதமான பதில் கொடுத்தார் ஏழு! அம்மா! நீ என் மனைவியாக இருந்தால், அந்த விஷத்தை நான் குடித்துவிட்டிருப்பேன் என்ருர். நீ அடங்காப்பிடாரி! போக்கிரி! உன்னேடு வாழ்வது சாவைவிடக் கொடுமை! என்ற இவ்வளவு அர்த்தமும் தொனிக்கும்படி அமைந்திலையோ அந்தப் பதில்!''

"ஆமாம் பொன்னி! அந்த அம்மா திக்குமுக்காடிப் போயிருக்கணுமே பொன்னி! ஏன் நம்ம நாட்டிலே இந்தக் கூர்மையான பேச்சு அதிகம் இருப்பதில்லை.''

"இல்லை என்று எப்படிச் சொல்வது. நிறைய இருக்குது, ஆனு அவைகளைக் குறித்து வைக்கிற

பழக்கம் இல்லை, சரியான முறையிலே. நம்ம நாட்டுப் புலவர்கள் இந்த வித்தையை மெத்தக் கற்றவர்களல்லவா? ஏமு! காளமேகப் புலவர், ஒருநாள் நாகப்பட்டிணம் சென்றாராம். பகல் பொழுது. பசி. ஊர்புதிது அவருக்கு. எங்காவது சாப்பாட்டுக்கடை சென்று சாப்பிட வேண்டும் என்ற எண்ணம். அங்கே தெருவில் சில சிறுவர்கள் விளையாடிக்கொண்டு இருந்தார்களாம். அவர்களைப் பார்த்து காளமேகப் புலவர், தம்பிகளா! சோறு எங்கே விக்கும்? என்று கேட்டார் கொச்சையாக...''

"சிறுவர்களிடம் இலக்கணமாகப் பேசுவானேன் என்று...''

"ஆமா......ஆனா அந்தச் சிறுவர்கள் இலேசுப்பட்டவர்களல்ல. இலக்கணமாகப் பேசினால் நமக்குப் புரியாது என்றல்லவா இவர் இது போலப் பேசுகிறார். நாம் எப்படிப் பட்டவர்கள் என்பதைக் காட்ட வேண்டும் என்று தீர்மானித்து, பெரியவரே! என்ன கேட்டீர்கள்? சோறு எங்கே விக்கும் என்றா? சோறு தொண்டையிலே விக்கும். தெரியாதா! என்று பதில் சொன்னார்கள்...''

"விக்கும் என்றால் விக்குகிறதே அது என்று இடித்துக் காட்டினார்கள் சிறுவர்கள்.''

இதைக் கேட்டதும் காளமேகம் தன்னை இந்தச் சிறுவர்கள் கேலி செய்கிறார்களே என்று கோபித்துக் கொள்ளாமல், இந்தச் சிறுவர்களுக்கு நல்ல தமிழில், எவ்வளவு விருப்பம் இருக்கிறது என்பதை எண்ணி எண்ணி மகிழ்ந்தாராம்...''

'சிலபேர்தான் பொன்னி! இது போலப் பொறுமையாக இருக்கிறார்கள். பலர் எறிந்து விழுவார்கள், துடுக்குத்தனமாகப் பதில் பேசுவார்கள். நிலைமையே மோசமாகிவிடும். எங்க சீனியர் ஒரு சம்பவம் பற்றிச் சொன்னார். ஒரு வெள்ளைக்கார ஜட்ஜாம்; அவன் எதிரிலே ஒரு வழக்கு நடத்திக்கொண்டிருந்த போது, உள்ளூர் வக்கீல் ஒருவர் தாம் சாமான்யமானவரல்ல என்பதைக் காட்டிக்கொள்ள எண்ணம் கொண்டு, "நான் சீமைக்குச் சென்று வந்தவன்'' என்பதைச் சொன்னாராம்...''

"அதாவது என்னமோ நீ வெள்ளைக்காரன் என்று கர்வம் கொள்ளாதே; நானும் உன்னோடே சீமைக்குப் போய்வந்தவன்தான், பெரிய ஆள்தான் என்று வாதாடுகிறார்...''

"ஆமாம் ஏமு! இதை அவர் பேச்சோடு பேச்சாகச் சொல்லி இருந்தால் பரவாயில்லை. சீமைக்குப்போய் விட்டு வந்தது காரணத்தாலேயே தனக்கு, வேறு எந்த வக்கீலுக்கும் காட்டாத அளவு மதிப்பு காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் கொஞ்சம் ஆணவத்தோடு பேசினார் ஜட்ஜு அதைவிட அகம்பாவக்காரர். விடுவாரோ! சீமைக்குப் போய்வந்தவரா! அப்படியா! என்னுடைய நாய் மூன்று தடவை சீமைக்குப்போய் வந்திருக்கிறது!! என்றார். அவர் லீவுக்குச் சீமைக்குப் போகும்போது தன்னோடு நாயையும் எடுத்துச் செல்பவர். வக்கீலுடைய முகம் எள்ளும் கொள்ளும் வெடிப்பது போலாகிவிட்டது.

"என்ன இருந்தாலும் பட்டு! அந்த வெள்ளைக்கார ஜட்ஜு பேசினது ரொம்பத்துடுக்குத்தனம். நிறத் திமிரோடு பேசி இருக்கிறார், நம்முடைய நாட்டவர்கள் அடிமைகள், இவர் எஜமானர் ஜாதி என்ற திமிர். இப்படிப்பட்ட திமிர்பிடித்த வெள்ளைக்காரர்களின் போக்குதான், வெள்ளைக்காரர்கள்மீதே நமக்கெல்லாம் வெறுப்பு பிறக்கும்படிச் செய்தது''

"நம்மநாட்டு வக்கீல்கள் இப்படிப் பட்ட ஜட்ஜுகளுக்குச் சரியான சூடுகொடுத்திருக்கவேண்டும்...''

"பலபேர் சரியான சூடு கொடுத்திருக்கிறார்கள் ஏமு! ஊர்பேர் கவனமில்லை. ஒரு கோர்ட்டிலே நம்மநாட்டு வக்கீல் வாதாடிக்கொண்டிருந்த போது, வெள்ளைக்கார ஜட்ஜு அலட்சியமாக, அந்தப் பேச்சைக் கவனிக்காமல், பக்கத்தில் தன் நாயை வைத்துக்கொண்டு அதனுடன் விளையாடிக்கொண்டு இருந்தாராம்......''

"நாய் அவ்வளவு முக்கியம், வக்கீலுடைய பேச்சைவிட! அவ்வளவு அகம்பாவம்......''

"பார்த்தார் நம்மநாட்டு வக்கீல். திடீலென்று பேச்சை நிறுத்திவிட்டு, சும்மா நின்றுகொண்டே இருந்தார். ஜட்ஜு ஒரு விநாடி இரண்டுவிநாடி பொறுத்துப் பார்த்துவிட்டு, என்ன? ஏன் வாதாடுவதை நிறுத்திவிட்டீர்கள்? என்று வக்கீலைப் பார்த்துக் கேட்டார். வக்கீல் நிறுத்திவிடவில்லை--நிறுத்திவைத்திருக்கிறேன்; துரை அவர்கள், கலந்துபேசிக் கொண்டிருப்பது முடியட்டும் என்று நிறுத்திவைத்திருக்கிறேன் என்றார் .........''

"முகம் செத்துப்போயிருக்க வேண்டுமே அந்த ஜட்ஜுக்கு! நாயிடம் கலந்துபேசித்தான் ஜட்ஜு விவரம் புரிந்துகொள்கிறார்; அவ்வளவு மட்டம் அவர் என்று குத்திக் காட்டும் பேச்சல்லவா அது...''

"ஆமாம். ஜட்ஜு நிலைமையை உணர்ந்துகொண்டார். வெட்கம் அவருக்கு, தான் செய்ததுதான் தவறு என்பதை உணர்ந்து, போக்கை மாற்றிக்கொண்டு, மன்னித்துவிடுங்கள்! என்று வக்கீலைக் கேட்டுக்கொண்டார்......''

"பரவாயில்லையே, ஆரம்பத்திலே துடுக்குத்தனமாக இருந்தபோதிலும், பிறகு பெருந்தன்மை காட்டி இருக்கிறார்......''

"அந்தப் பெருந்தன்மை எப்படி வந்தது? வக்கீலுடைய பேச்சிலே நயமும் நையாண்டியும் இழைந்து இருந்ததாலேதான். வக்கீல் கடுமையாகப் பேசி இருந்தால், நிலைமை இன்னமும் மோசமாகிவிட்டிருக்கும் .........''

"பெரியவர்கள் அதனால்தானே பேசுவது என்றால் அவ்வளவு ஜாக்ரதையாக இருக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள்......''

"திருவள்ளுவர் அழகாகச் சொன்னாரே, நல்ல வார்த்தைகள் இருக்க. கடினமான வார்த்தைகளைப் பயன்படுத்துவது, கனி இருக்கும்போது காயைப் பயன்படுத்துவதுபோல என்று''

"எவ்வளவு எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய விதமாகக் கூறி இருக்கிறார்பார்த்தயா, வள்ளுவர்...''

"வள்ளுவர் மன்றம் என்றே ஆரம்பித்துவிடலாமே......''

"வந்தாச்சி ஏமு! உங்களவர் பேசிக்கொண்டே வருகிறாரே; யாருடனோ......''

"இதற்கு எதுக்காகப் பலபேருடன் பேசி யோசிப்பது. பொறுத்தமான பெயர்தான்—வள்ளுவர் மன்றம் என்பது......''

"பெயர் பொறுத்தமில்லை என்று நான் சொல்லவரவில்லை...''

"பொன்னி! பொன்னி! சொன்ன படி ஆரம்பித்துவிட்டாரடி அவர்..."

"வம்பு செய்வதுன்னு திட்டமிட்டு, ஒரு சினேகிதரையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கார்......யார் அவர்னு தெரியலையே..."

"அவர்யார்னு தெரியாதா...காலேஜிலே புரபசராக இருந்தவர் பல வருஷம்...சரித்திர பாடம்......இப்ப ஓய்வு எடுத்துக்கொண்டார்..."

"வயது முப்பது முப்பத்தைந்து தான் இருக்கும் போலிருக்கு. ஓய்வு எடுத்துக்கொண்டவர் என்று சொல்கிறுரே..."

"அசடே! இரண்டு பேரும் சேர்ந்து, வேறு யாரோ ஒருவரைப் பத்திப் பேசரு...இது புரியவில்லையா உனக்கு..."

"எல்லோருக்கும் எல்லாம் புரியும்னு சொல்ல முடியுமா...பலர் ஒன்ருகக் கூடிப் பேசினு, அவரவர்களுககுத் தெரிந்தது பற்றி அவரவர்களும் சொல்லுவா...மொத்தத்திலே பல விஷயங்களைத் தெரிந்துகொள்கிற சந்தர்ப்பம் கிடைக்கும்..."

"காபி கொண்டு வரவா...உங்களைத்தான் கேட்கறது..."

"காதிலே விழாது ஏமு! இரண்டு பேரும் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருக்காளே..."

"சாப்பி ஓட்டல் நடத்துபவர்னு கேவலமாப் பேசப்படாது......இப்ப அது பெரிய தொழில்...இவருக்கு மட்டும் ஆறு இடத்திலே இருக்குது ஓட்டல், லாட்ஜ்..."

"ஓட்டல் ஓட்டல்னு இந்த ஆம்பிள்ளைகள் உயிரை விடரு......என்ன சுவையோ தெரியல்லை அதிலே, எவ்வளவு சாதாரணமாக இருந்தாலும், வீட்டுச் சாப்பாடுபோல ஆகுமா..."

"ஏமு! பட்டு போன்றவர்கள் சமைத்துப்போட ஆரம்பிச்சா, ஓட்டல் எவ்வளவோ மேல்னுதான் யாருக்கும் தோணும்..."

"என் சமையல் மோசம்னு நினைக்கிரு பொன்னி! ஒரு நாள் காட்டறேன் என்னுடை சமையல் திறமை முழுவதும்..."

"இப்ப வேண்டாண்டி பட்டு! கல்கத்தா போயிருக்கருளே டாக்டர் அவ வந்து விடட்டும்; ஏன்னு, பக்கத்துலே நமககு வேண்டிய டாக்டரை வைத்துக்கொண்டுதான் நீ சமைத்ததைச் சாப்பிடவேண்டும்; ஆபத்து ஏற்படாது."

"போதுமே குறும்புப் பேச்சு!"

"பேச்சு என்ரு, பிரசங்கம் நடத்தறதுன்னு இருக்கப்படாது. வெறும் பேச்சாகத்தான் இருக்கவேண்டும் ...ஒன்றிலிருந்து மற்றென்று என்று பல விஷயங்களைப் பேசலாம்..."

"ஏமு! கேட்குதா அவர் சொல்வது. ஏதோ ஒரு சங்கம் ஏற்பாடாகுது..."

"ஏன்! எங்களுக்குன்னு ஒரு சங்கம் இருக்கப்படாதோ..."

"என்ன ஏமு! விடமாட்டார் போலிருக்குதே. போ! போய் ஏதாகிலும் பதில் சொல்லு..."

"சங்கம் வைத்துக் கொள்வதை யார் வேண்டாம் என்று சொன்னது ......"

"சங்கம்னு ஆரம்பிப்பா ஏமு! கடைசியிலே அது சீட்டாட்டக் கச்சேரியாக முடியும்..."

"கேட்டயாடா கோபு! பட்டு...... இந்தப் பெண்ணுடை பேர் பட்டு... பட்டு சொல்கிறபடி, பல சங்கம் ஆகிவிட்டிருக்குது......அந்த மாதிரி நம்ம சங்கம் ஆகிவிடக்கூடாது... இங்கே இவர்கள் நடத்தருளே சங்கம், அதைவிடத் தரமாக இருக்கணும் நம்முடையது."

"நாங்க ஒரு சங்கமும் நடத்திக் கொண்டு இல்லையே. ஏன் ஏமு! உங்களவர் நாம ஏதோ சங்கம் நடத்துவதாக எண்ணிக்கொண்டிருக்கிருரா?"

"சங்கம்னு பேர் இல்லையே தவிர, நீங்க இங்கே கூடி என்னென்ன விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாதா..."

"ஏமு! ஒண்ணுக்கு ஒன்பதாக அவரிடம் நம்ம பேச்சைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வர்ரய்யா..."

"ஏமு சொல்லி அல்ல, பொன்னி! உங்களோட பேச்செல்லாம் வருதே ஒரு பத்திரிகையிலே; அதைப் பார்த்துத்தான் சொல்றேன். கோபு! நாமும் ஒரு பத்திரிகையைப் பிடித்தாகணும்; நம்மோட பேச்சு வெளிவர..."

"ஏன்! ஒரு பத்திரிகையே ஆரம்பித்து விடுங்களேன்..."

"சும்மா இருடி பட்டு! பத்திரிகையிலே கட்டாயமா உங்களோட பேச்சு வரவேண்டும் என்ரு...நானே ஏற்பாடு செய்துவிடுகிறனே...எங்க பேச்சு வெளிவருகிற பத்திரிகையிலேயே உங்க சங்கத்துப் பேச்சும் வெளிவரச் செய்யமுடியும்..."

"இன்னும் என்னடா தயக்கம் சங்கம் ஆரம்பிக்க வேண்டியது தான். வா! வா! போய் இப்பவே, டாக்டர் லோகன், புரபசர் மோசஸ், பார்-அட்-லா தம்பிகுட்டி, இவர்களைக் கலந்து பேசிவிடலாம்..."

"ஆரம்பமே பெரிய அளவிலே இருக்குதே..."

"ஏமு! போயிட்டு வர்ரோம்..."


## 'காஞ்சி' சந்தாவிகிதம்

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 10—00 |
| ஆறுமாத சந்தா | ரூ. 5—00 |

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கவலையைத் துடைத்திடும் காரியத்தை அல்லவா மேற்கொண்டுவிட்டார். நமது உரிமைக்காக வாதாடுவார் என்று எண்ணிக்கொண்டிருந்தோம்; நம்மைச்சிங்களத்தாரிடம் காட்டிக்கொடுப்பதுபோல அல்லவா இருக்கிறது அவர் செய்துகொண்ட ஒப்பந்தம். இதற்கோ இவர்களிடம் முறையிட்டுக்கொண்டிருந்தோம்! இதற்கோ, இந்திய சர்க்கார் இருக்கிறது எமக்காக வாதாட என்று மார்தட்டிக் கூறிவந்தோம். கனி கிடைக்குமென்றிருந்தோம், கடுவிஷமன்றோ தரப்படுகிறது. ஏற்றம் பெறுவோம் என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தோம். நம்மைச் சிங்களவர் எள்ளி நகையாடும் நிலையில் வைத்துவிட்டாரே, லால்பகதூர்! என்றெல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணான நிலை பெற்றுள்ளனர். தமிழர் தலைவர் திரு. செல்வநாயகம் விடுத்துள்ள அறிக்கை தமிழ் மரபினர் எத்துணை வேதனைபடுகின்றனர் என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

கசப்பான முடிவு என்று கூறிக் கசிந்துருகியிருக்கிறது தினமணி.

மற்ற மற்ற இதழ்களும் மனவேதனை தரும் நிலை என்ற பொருள்பட எழுதுகின்றன.

திருமதி பண்டாரநாயகாவுக்கு அடுத்தபடியாக இந்த ஒப்பந்தத்தைக் குறித்து மகிழ்ச்சி கொண்டவர் ஒருவர் உண்டு என்றால் அவர் நமது மாநில முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களே!!

இலங்கையில் உள்ள தமிழ் மரபினர்களை இந்தியர்கள் என்று கொள்ளமுடியாது என்ற நேரு கோட்பாட்டை ஒழித்திட, லால்பகதூர் எங்ஙனம் உரிமை பெற்றார்? அறிவாற்றலில், நேருவை மிஞ்சுபவர் தாம் என்ற உரிமை கொண்டாடுகிறாரா? நேருவுக்குப் புலனாகவில்லை இந்த வழி, இதோ எனக்கு வழி தெரிகிறது என்று கூறி நேருவிடம் இருந்ததைவிட மேலான நுண்ணறிவு தமக்கு இருக்கிறது என்று வாதாடப் போகிறாரா?

நேரு சிக்கலை தீர்த்துவைக்கத் தவறிவிட்டார், இதோ நான் தீர்த்துவிடுகிறேன் என்று கித்தாப்புப் பேச இதுபோலச் செய்தாரா?

இலங்கையிலுள்ள தமிழ் மரபினர், எம்மை இந்தியர் என ஏற்றுக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்ப அழைத்துக்கொள்ளுங்கள் என்று ஏதாவது இவரிடம் முறையிட்டனரா? அந்த முறையீடு கேட்டு நான் இந்த முடிவை மேற்கொண்டேன் என்று வாதாடப் போகிறாரா? இலங்கையிலுள்ள தமிழ் மரபினரின் கருத்தறிய முயற்சி எடுத்துக்கொண்டாரா? முடிவு, இறுதியாக அங்குள்ள தமிழ் மரபினரின் ஒப்புதல் பெற்ற பிறகே அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று கூறுகிறாரா? அவர் பெரியவர்! மிகப் பெரிய நிலையிலும் உள்ளவர்! என்றாலும் கேட்கவேண்டி இருப்பதால் கேட்கிறோம்; இலங்கையிலுள்ள தமிழ் மரபினரின் கருத்தை மதித்திடாமல், அவர்களுடன் கலந்துபேசாமல், அவர்களின் ஒப்புதல் பெறாமல், அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி இலங்கை சர்க்காருடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள இவர் யார்?

இவர், இந்தியாவின் பிரதமர்! புரிகிறது! தெரிகிறது!! ஆனால் பிரச்சினை, இலங்கையில் உள்ளவர்களைப் பற்றியது; அவர்கள் ஒப்பம் அளித்தாலொழிய அவர்கள் சார்பாகப் பேசிட, முடிவெடுக்க, இந்தியப் பிரதமருக்கு என்ன உரிமை இருக்கிறது!!

இலங்கை சர்க்காரின் தலைவர்களாக இருந்துவந்த சேனநாயகா, கொத்தலாவலை ஆகியோருடன் அவ்வப்போது நடத்தப்பட்ட பேச்சுகளும், தீட்டப்பட்ட திட்டங்களும், இலங்கை சர்க்காரின் போக்கின் காரணமாகவே பொருளற்றுப் போய்விட்டன.

இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்துகொள்ள இடமளிக்கிறோம் என்று நேருவிடம் வாக்களித்துவிட்டு, குடிஉரிமைகேட்டவர்களை இழுக்கடித்து, காலொடித்து, சூது செய்ததை யாரறியார்!

நியாயமற்றமுறையில் பலர், குடிஉரிமை மறுக்கப்பட்டது, அம்பலப்படுத்தப்படவில்லையா?

தமிழர்களைக் குடிஉரிமை பெறவிடாமல் செய்யும் சூட்சியில் சிங்கள அதிகாரிகள் ஈடுபட்டனர் என்பது மெய்ப்பிக்கப்படவில்லையா?

இந்த முறை கேட்டினை இலங்கை உயர்நீதி மன்றமே கண்டிக்கவில்லையா?

இவை யாவும், எப்படியேனும், இலங்கையிலிருந்து தமிழ் மரபினரைத் துரத்திவிடவேண்டும் என்பதுதான் இலங்கை சர்க்காரின் திட்டம் என்பதைக் காட்டவில்லையா?

இந்தப் போக்குக்கு உடந்தையாக இருந்திட லால்பகதூர் ஒப்புக்கொண்டுவிட்டார் என்பதன்றி இந்த ஒப்பந்தத்துக்கு வேறென்ன பொருள்?

இலங்கைவாழ் தமிழர்களைக் கைவிட்டுவிட்டார்கள் என்று கூறினால் மட்டும் போதாது, காட்டிக்கொடுத்துவிட்டார்கள் என்பதுதான் பொருத்தம்.

ஏமாற்றத்தையும் துயரத்தையும் சுமந்துகொண்டு, உழைத்து உருவாக்கிய திருநாட்டைவிட்டுத் துரத்தப்பட்டு, தமிழகம் வரப்போகிறார்கள் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் — பசி, பட்டினி, வேலையில்லாக் கொடுமை என்பவைகள் தலைவாயிலில் நிற்கின்றன அவர்களை வரவேற்க. சாவை, அமைதிக்கு அடையாளமென்றும்; வேதனைத் துடிப்பை, வலிவுக்குச் சான்று என்றும், கூறிடும் வித்தகர்களாகஉள்ள அமைச்சர்கள் உள்ளனர், வருக! ஒழுங்காக இருந்திடுக! அர்ஜுனன் கதையினைத் தெரிந்துகொள்க! என்று அறிவுரை கூற.

வரப்போகிறார்களாம் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தொகையினர்; உழைத்து உருக்குலைந்தவர்கள்; உரிமை பறிக்கப்பட்ட நிலையினர்; காப்பாற்றப்படவேண்டியவர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டவர்கள், காவேரி தென்பெண்ணையை இதற்குமுன்பு காணாதவர்கள்; தமிழ் மரபினர்; தத்தளிக்கும் நிலையினர்!!

காங்கிரஸ் அரசு ஒன்றின்மீது ஒன்றாக நமக்குப் பரிசு அளித்து வருகிறதல்லவா! இது எல்லாவற்றிலும் மேலான பரிசு — ஐந்து இலட்சம மக்களின் வாழ்வு பறிக்கப்பட்டு, இங்கு அனுப்பிவைக்கப்படும் பரிசு!! ஐயோ! தமிழா! உன்கதி இதுவோ!!

சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என்.ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது, ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.